# பாலர் கல்வி


| தொகுதி 6 | 1941 ஞு மே மீ<br>விஷு ஞு வைகாசி மீ | பகுதி 2 |
| --- | --- | --- |


## வாழ்க்கை சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட பாடதிட்டம் VI

S. ஜகந்நாதன், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

### 10. பருவ காலங்கள்

நமது வாழ்க்கையில் பல சம்பவங்கள் பருவ காலங்களை அனுசரித்தே நடக்கின்றன. நாட்டின் முக்கிய தொழிலான வியவசாயம் பருவ காலத்தையே முற்றும் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. வியவசாயியின் அலுவல்கள் கோடை மாரி காலங்களுக்கு ஏற்றதாய்க் கொண்டிருக்கின்றன. நமது வாழ்க்கையில் ஆகாரம், உடை, வசதி இவை மேற்படி காலங்களுக்கு ஏற்ப மாற்றியமைய வேண்டியிருக்கின்றன. ஆகவே இக்காலங்களையே முக்கிய விஷயமாகக்கொண்டு அவை சம்பந்தமான பல பாடங்களைப் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தல் சாலச் சிறந்ததாகும்.

1. சம்பாஷணை

A. வெயிற்காலம், மனிதனின் வாழ்க்கை:—வெயிலின் கடுமை-காலையில் வேலை, அலுவல்கள் - பகலில் வெயிலின் உக்கிரம் - வீட்டில் தங்குதல் - ஓய்வு - வீட்டினுள் இருந்தே கவனிக்கப்படக்கூடிய விஷயங்கள் - குளிர்ந்த பானங்கள் - இலேசான உடுப்பு - சாயங்காலம் உலாவி வருதல் - வீட்டிற்குப் பந்தல் போடுவது - வருஷாந்தர சாமான்கள் சேர்ப்பது (துவரை, உளுந்து, புளி, பருப்பு வகைகள்) கணக்குகள் பார்ப்பது வியாபாரம் - வீடு கட்டுவது பழுது பார்ப்பது - வியவசாயக் கருவிகளைச் செப்பனிடுவது - பிரயாணம் தீர்த்த ஸ்தலயாத்திரை - கவி




யாணங்கள் - கோயில் உற்சவாதிகள் - பாய்ச்சல் வசதிகளைச் செய்து கொள்வது - தென்னை, மா, பலா, பனை புளி இம்மரங்களின் பலன்களை ஒழுங்குபடுத்துவது.



2. கைவேலை


(1) பலவித விசிறிகள் - கானலுக்காக தட்டிகள் (2) திரைகள் ஒவ்வொன்றில் ஒன்றைச் செய்யக் கற்றுக்கொள்ளுதல் (3) நடந்து செல்ல பாதரட்சை அவசியம் (4) குடை (மழைகால பாடதிட்டத்தைக் கவனிக்கவும்.)


விசிறிகள் :—


1. பனை ஓலை விசிறி.
2. ஷை (வட்டமானது)
3. தென்னை விசிறி.
4. ஜப்பான் விசிறி.
5. விளாமிச்ச வேர் விசிறி
6. எலெக்ட்ரிக் விசிறி.
7. மேஜை எலெக்ட்ரிக் விசிறி.
8. கோயில் விசிறி.
9. மயிலிறகு விசிறி.
10. பனை ஓலை பெரியது.
11. கை விசிறிகள்.
12. பங்கா.



















**தட்டிகள்**

மூங்கிற் தட்டிகள்.
பிரப்பந் தட்டிகள்.
ஈச்சந் தட்டிகள்.
விளாமிச்ச வேர்த் தட்டிகள்.
தாழந் தட்டிகள்.

**பாதரட்சை**

அட்டையில் அவரவர் கால்களுக்கு ஏற்ற செருப்பு தைக்க கால் அளவு, வார் அளவு எடுத்து, அட்டைச் செருப்பு தைக்கவும்.

3, 4. **ஆகாரவகை, குளிர்ந்த பானங்கள்.**

இளநீர், நீர்மோர், பானகம், எலுமிச்சம்பழரசம், பனை நுங்கு.

**பனைநுங்குக் கதை** :—ஔவையாரும், மூவேந்தரும்.

(விநோதரஸ மஞ்சரி - ஔவையார் சரித்திரம் கவனிக்க.)

திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும் பாண்டியனும்
மங்கைக் கறுகிடவந்து நின்றார் மணப் பந்தலிலே
சங்கொக்க வெண்குருத் தீன்று பச்சோலை சலசலத்து
நுங்குக் கண்முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்து
பங்குக்கு மூன்று பழந்தரவேண்டும் பனந் துண்டமே.

கோடைகாலத்தில் கிடைக்கும் பழங்கள் :—முக்கனி : வாழை, மா, பலா : மற்றும் கும்மட்டிப்பழம், முலாம்பழம், பச்சை திராட்சைப் பழம், வெள்ளரிப்பழம், முந்திரிப்பழம், இவை கிடைக்கும்.

காய்கறிவகைகள் : வாழை, பாகல், கத்தரி, கொத்தவரை, புடல், முருங்கை, கீரைத்தண்டு.

5. இராப்பகல் நேரங்கள்

பகல்பொழுது அதிகம். இராப்பொழுது குறைவு.

| மாதம் | தேதி | சூரிய உதயம் காலை | சூரிய அஸ்தமனம் மாலை | பகல் பொழுது ம-நி. | இராப் பொழுது ம-நி. |
|---|---|---|---|---|---|
| மே | 1 | 5-48 | 6-24. | — | — |
| | 15 | 5-43 | 6-27. | — | — |
| ஜூன் | 1 | 5-42 | 6-32. | — | — |
| | 15 | 5-42 | 6-36. | — | — |
| ஜூலை | 1 | 5-46 | 6-39. | — | — |
| | 15 | 5-50 | 6-39. | — | — |

தினசரிப் பத்திரிகையில் இவை கொடுக்கப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும். பஞ்சாங்கத்தில் அகஸ் என்று நாழி, விநாடியில் கொடுக்கப்பட்டிருக்கும்.

அகஸ் (பகல் பொழுது)

| | | |
|---|---|---|
| சித்திரை | 1· | 30-25· |
| | 15· | 30-39 |
| வைகாசி | 1 | 30-56 |
| | 15 | 31-10· |
| ஆனி | 1 | 31-27· |
| | 15 | 31-38 |


| | | நா. | வி. |
|---|---|---|---|
| ஆனி | 31· | 31 | 21 |

6. மிக உஷ்ணமான ஊர்கள்

குண்டூர், நெல்லூர், கடப்பை முதலியன. சிலர் கோடை காலத்தில் சுகவாசஸ்தலுக்குச் செல்லுகின்றனர். இவற்றைப் படத்தில் குறிக்கவும்.

உதகமண்டலயாத்திரையை வர்ணித்தல் - உதகமண்டலக் காட்சிப்படங்கள். இந்த யாத்திரை சம்பந்தமான பல படங்களைச் சேர்த்து வரிசைக்கிரமமாக ஒட்டி ஒரு சினிமாப்பெட்டி தயார் செய்து கொள்ளலாம். உதகமண்டலம், கோடைக்கானல், ஏற்காடு, கன்னியாகுமரி

முதலிய ஊர்களுக்குச் சென்றவர்கள் தமது அனுபவங்களைச் சொல்லுவது உசிதமாகும். ஒரு தினத்தை அவ்வூர்களில் எப்படிக் கழிக்கிறார்கள்?





7. ஜலத்திலிருந்து ஜலம்

*நீர் வறண்டு போகிறது :*
*குளம் குட்டை நீரெல்லாம் எங்கே? ஆவியாய்ப் போகிறது :*

**படத்தைப் பற்றின குறிப்பு.**

1. *சமுத்திர ஜலம்*
2. *சமுத்திர ஜலம் சூரிய வெப்பத்தினால் ஆவியாகுதல்.*
3. *ஆவி மேலே கிளம்புதல். மேகமாகுதல்.*
4. *மேகம் கருமை நிறமாகுதல்.*
5. *குளிர்ந்த காற்று அடித்தல்.*
6. *குளிர் காற்று நீர் கொண்ட கருமேகத்தின்மீது பட்டு மழையாக ஊற்றுதல்.*

7. மழை ஜலம் குளம் குட்டைகளில் நிரம்புதல்




8. ஆற்றில் வெள்ளம் புரண்டு மறுபடி ஆற்றுஜலம் சமுத்திரத்தைச் சேர்தல்.

மாரிகால விஷயத்திற்கும் இப்பாடம் பொருத்தமானது.

## கடுங்கோடையும் வர்ணனையும்

மழைகள் கிடையாது மதுரை நகர் சீமையிலே
தூரல் கிடையாது தென்மதுரைப் பூமியிலே
துளிகள் விழுவதில்லை சொக்கர் மதுரையிலே
காய்ந்துலர்ந்து போயினவே கனமதுரைப் பட்டணத்தில்
எரிந்து புகைகிறது ஈரங் கிடையாமல்
குடிக்க நீர் கிடையாது குளங்கள் மடுக்களெல்லாம்,
காகங் குடிப்பதற்கு கரண்டி ஜலம் கிடையாது
ஆறு குளங்களெல்லாம் அடங்கலும் வறண்டனவே.
ஏரிகள் வறண்டனவே ஏற்றக் கோலாழ மட்டும்.
பூமிகள் சூடெழும்பிப் பொங்கிற்றே தணலாக
விளைவுகள் கிடையாது வேந்தன் மதுரையிலே

சருகு போலுலர்ந்தனவே தழைத்த மரங்க ளெல்லாம்
பூமி யுலர்ந்தது பூண்டுங் கிடையாது
பறவைகள் கிடையாது பாண்டிய தேசத்திலே
மதுரையைச் சுற்றி மகா வனங்கள் செடிகளெல்லாம்
காய்ந்து மிகத் தீய்ந்து கரும் புகைச்சல் கொண்டனவே
தூங்க நிழல் கிடையாது தனி மதுரை பூமியிலே..........
..............................................................................

(அல்லியரசாணி மாலை).

## 8. உஷ்ண அளவு : உஷ்ணமானி

தினசரி உஷ்ணம்: தினசரிப் பத்திரிகையில் சில ஊர்களின் உஷ்ணங்களைத் தெரிந்து கொள்ளமுடியும்.

ஒரு தினத்தின் அதிக உஷ்ணமும் குறைந்த உஷ்ணமும் கொடுக்கப்பட்டிருக்கும். தசாம்ச பின்னம், கற்றுக் கொடுக்க நிரம்பப் பயிற்சி கொடுப்பதில் தினசரி அதிக உஷ்ணம், குறைந்த உஷ்ணம் இவற்றையும் உதாரணமாகக்கொள்ளலாம்.

| மே 1 | அதிக உஷ்ணம் | குறைந்த உஷ்ணம் | மே 26 | |
|---|---|---|---|---|
| சென்னை | 94·7 | 80·5 | 109·0 | 85·6 |
| கர்நூல் | 103 | 89 | 107 | 81 |
| பெல்லாரி | 106 | 80 | 103 | 78 |
| கடப்பை | 109 | 87 | 108 | 85 |
| நெல்லூர் | 105 | 81 | 111 | 88 |
| கூடலூர் | 94 | 79 | 105 | 84 |
| சேலம் | 103 | 80 | 102 | 80 |
| மதுரை | 105 | 83 | 104 | 83 |
| பெங்களூர் | 96 | 72 | 96 | 69 |
| கூனூர் | 77 | 57 | 82 | 60 |
| கோடைக்கானல் | 70 | 56 | 71 | 59 |

பயிற்சிகள் :—(1) அதிக உஷ்ணமான ஊர்களில் ஆரம்பித்து தினசரி உஷ்ணம் படிப்படியாகக்குறைந்துவரும்படி ஊர்களை எழுதிக் காட்டு.

(2) இரண்டு ஊர்களின் உஷ்ணத்தின் வித்தியாசம்.

(3) மிகவும் உஷ்ணமான ஊருக்கும் மிகவும் குளிர்ந்த ஊருக்குமுள்ள உஷ்ண வித்தியாசம்.

(4) எம்மாதிரி ஊர்களில் உஷ்ணம் குறைவாகக் காணப்படுகின்றன ?

**B.—நிழலும் நேரமும்:**—காலைப் பள்ளிக்கூட நாட்களில் பள்ளிக்கூடத்திலேயே கால்மணி அரைமணிக் கொருதரம் நிழலின் நீளத்தை அளந்தும், அதன்பிரகாரம் நேரம் தெரிந்து கொள்ளவும் தெரிந்து கொள்ளலாம்.

வெளிச்சமும் நிழலும் - வெளிச்சத்திற்கு எதிர் நிழல்.

காலை:—பொழுது போகப் போக நிழல் சுருங்குதல்.

மாலை:—பொழுது போகப் போக நிழல் நீளுதல்.

| உதாரணம் | காலை நேரம் ம. நி. | நிழலின் நீளம் |
|---|---|---|
| | 6·17 | 138 அடி. |
| | 6·30 | 68 ,, |
| | 6·45 | 39 ,, |
| | 7·0 | 28 ,, |
| | 7·30 | 19 ,, |
| | 8·0 | 13 ,, |
| | 9·0 | 9 ,, |
| | 10·0 | 5 ,, |

நேரம் கண்டறிதல். நிழலின் நீளத்துடன் 5ஐக் கூட்டு. அந்த எண்ணால் நூறை வகு: ஈவு நாழிகையைக் காட்டும். காலையில் சூரிய உதயத்திற்குப் பிறகு அவ்வளவு நாழியென்றும் மாலையில் சூரிய அஸ்தமனத்திற்கு அவ்வளவு நாழியிருக்கிறதென்றும் கணக்கிடவும்.

**C.**—4 அங்குல ஒரு குச்சியை ஒரு பெரிய அட்டையின் நடுமத்தியில் அசையாமல் இருக்கும்படி பதியவைக்கவும். காலை முதல் மாலை சூரியன் அதன்மீது விழும்படியான ஒரு சமமான தரையில் அட்டையை ஒரு மேஜைமீது வைக்கவும். குச்சியின் நிழல் அட்டைமீது விழும். ஒரு மணிக் கொருதரம் மணிப்பிரகாரம் நிழலின் நீளத்தையும் அளந்து, மணியையும் குறித்து எழுதிவைக்கவும்.

## 9. தேகசௌக்கியம், சுகாதாரமுறைகள், நோய்கள்

காலை ஸ்நானம்: சுத்த உடுப்பு: ஆகாரத்துடன் காலாகாலத்தில் கிடைக்கும் நல்ல கனிந்த பழங்களைப் புசித்தல் - மலச்சிக்கல் - எல்லா நோய்களுக்கும் ஆதாரம்.

கோடைக் கொப்பளம், அம்மை முதலிய நோய்கள் வராமல் தடுக்க, வந்தவுடன் சிகிச்சை செய்ய, வந்தபிறகு மற்றும் கவனித்துக் கொள்ளவேண்டிய ஏற்பாடுகள். இது சம்பந்தமான சுகாதார இலாகா வெளியீடுகளை வாசிக்கவும்,

10. A. தனிப்பாடல்

B. விடுகவிகள் :—



கல்லும் உறுத்தாது; காலில்
[முள் தைக்காது;
எல்லை மார்த்தண்டன்சூடேறாது;—
[தொல்லைவரும்;
மாலை இருளில் வழிநடக்கக்கூசாது
காலில் செருப்பிருந்தக்கால்.




முனி அதட்டும்; முள் தூக்கும்; முன் நீர் அளக்கும்
கனி உதிர்க்கும் கௌவும் நாய் காக்கும்; தனிவழிக்குப்
பத்திரமதாகும்; பயம் தீர்க்கும்; பாம்படிக்கும்
கைத்தலத்தில் தண்டிருந்தக்கால்,

B. விடுகவிகள் :—(சிறுவர் பகுதி கவனிக்க.)—இவற்றில் சிலவை மழைகால பாடதிட்டத்திற்கும் பொருத்தமானவை.

11. கோடைகால உற்சவாதிகள் : பண்டிகைகள்

சித்திரை மாதம் முதல் தேதி - தமிழ் வருஷப் பிறப்பு - பண்டிகை. புதுவருஷப் பஞ்சாங்கம் படித்து வருஷப்பலன் அறிதல்.

பிர்ம்மோற்சவம் : கோயில்களில்

அக்ஷய திருதியை : விசேஷ நாள்.

நீர் மோர், பானகம், பயத்தம்பருப்பு சுண்டல், பலாப்பழம், வாழைப்பழம், விசிறிகள் இவை வழங்குதல் வழக்கம்.

(கோடைகாலத்திற்குத் தகுந்தவைகள் என்பதைக் கவனிக்க.)

| | |
|---|---|
| கத்தரி நாள் அல்லது அக்கினி நக்ஷத்திரம் | சித்திரை மாதம் 25 முதல் வைகாசி மாதம் 14 முடிய. 3 வாரங்கள் - கடுமையான வெயிற் காலம். |

சித்திரா பௌர்ணமி : உப்பில்லா ஆகாரம் - தீர்த்தவாரி - சித்திரகுப்த நாயனர் கதை.

வஸந்த உற்சவம் : குளிர்ந்து இருக்கும்படி தண்ணீர்த் தொட்டி கட்டி நந்தவனமாதிரி ஏற்பாடு செய்து அப்பந்தலில் சுவாமி வலம் வருதல்.

12. A :—சாயங்காலம் உல்லாச பிரயாணம்.

இதுவரையில் கோடை காலத்தைப்பற்றிப் படித்த விபரங்களைக் குறித்து சம்பாஷித்துக்கொண்டே போகலாம். அல்லது ஓர் இடத்தில் அமர்ந்து சம்பாஷிக்கலாம். கோடைகால மழை காலங்களைப்பற்றின ஒரு சம்பாஷணை தயார் செய்யவும். (மழை கால பாடதிட்டம் கவனிக்கவும்)

B. பொருள்காட்சி :—கோடை கால யாத்திரை சம்பந்தமாய்ச் சேகரித்த படங்கள், தாங்களே செய்த விசிறி, குடை, பாதரட்சை முதலியவைகள், விடுகவிகள், தனிப் பாடல்கள், கணித சம்பந்தமான புள்ளி விபரங்கள், தேசப் படங்கள் இவற்றை வகுப்பில் ஒழுங்கு பெற அமைத்து ஒரு பொருள் காட்சி நடத்திக்காட்டவும். பிள்ளைகள் அப்படங்கள், பொருள்கள் இவற்றைப் பற்றித் தாங்களே பிறருக்குத் தெரிவிக்கக் கூடியபடி பேசப் பழக்கி நிரம்ப ஞானம் உள்ளவர்களாகவும் செய்யச் செய்வது மெச்சத் தக்கதாகும்.

(தொடரும்)

# சாரணீயம்-அதன் உண்மையும் முறையும்-13

(425-ஆம் பக்கத் தொடர்ச்சி)

S. ஸ்ரீநிவாஸன்—போர்டு உயர்பாடசாலை, செங்கம்

## இரண்டாம் பாகம்—சாரண முறை

### 17. கற்றுக்குட்டியாக (To become a tenderpad)

சிங்கக்குட்டி சின்னஞ் சூட்டிக்கொள்ளத் தகுதியுடையவனுவதற்கு சிறுவர்களைப் பழக்குவது வெகுசுலபம். இதை அவர்கள் ஒரு மாதத்திற்குள் கற்றுக்கொண்டு, அதற் கடையாளமாக சின்னம் சூட்டப் பெற்று, கற்றுக்குட்டிகளாகி விடவேண்டும். இதில் காலதாமதம் கூடாது. "ஆரினகஞ்சி பழங்கஞ்சி" என்பது போல சின்னஞ் சூட்டலைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தால், பிள்ளைகளுக்கு ஊக்கம் தளர்ந்து விடும்.

கற்றுக்குட்டி சோதனைகளாவன :—

(அ) திரள் கவாத்து (ஆ) நிரை கூடல் (இ) சிம்ம கர்ஜனை (ஈ) வாக்குறுதி (உ) வணக்கம் (ஊ) தேக சுத்தம்.

(அ) திரள் **கவாத்து** : கவாத்து (Drill)ப் பழக்கம் மிகவும் முக்கியமானது. ஆகேலாவின் திறமையைப்பற்றியும் உழைப்பைப் பற்றியும் பிறரை எளிதில் நல்லெண்ணங்கொள்ளும்படி செய்வது இதுவே. சிலர் இதற்குப் போதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்வது கிடையாது. அதற்குக் காரணம் அவர்கள் இதன் சிறப்பை அறிந்துகொள்ளாததே. ஆனுல் பிள்ளைகள் சாரணர்களாகும்போது ஒழுங்காக நிற்கவும், நடக்கவும், ஓடவும் தெரியாமல் சாரணச் சடங்குகளின் பெருமையையும், அழகையும் ஒருங்கே கெடுத்துவிடுகிறுர்கள். போலீஸ்காரர்களுக்கும், ஆம்புலன்ஸ் படைகளுக்கும் அடிக்கடி கவாத்து நடத்துவதை நாம் பார்த்திருக்கிறோம். இது ஆபத்துக்களிலும், நெருக்கடிகளிலும் ஒழுங்காக நடந்துகொள்ளுவதற்கு வழி. சண்டை, கலகம் நடக்கும்போதுமட்டுமல்ல ; சமாதான காலத்தில்கூட ஒரு தேசத்தின் குடிகள் ஒழுங்காய் அதாவது வரிசையாய் நிற்கவும், வரிசைக் குலையாமல் ஒருவர்பின் ஒருவராய் நடந்துசெல்லவும், விரைவாக ஓடவும் அவசியம் ஏற்படுகிறது. சினிமாவிலும் ரயிலிலும் டிக்கெட் வாங்கும் போதும், உபன்யாஸங்களைக் கேழ்க்கக் கூடும்போதும், ரயில், டிராம் வண்டிகளில் ஏறும்போதும் ஒருவர்மேல் ஒருவர் விழுந்து சில சமயம் உயிருக்கே ஆபத்து நேருவதுண்டு. இச்சந்தர்ப்பங்களில் எவ்வளவு

ஒழுங்கீனமாக ஜனங்கள் நடந்துகொள்ளுகிறுர்கள் என்பதை நினைக்கும் போது, அவர்களுக்கு இப்பயிற்சியின் அவசியம் எவ்வளவு என்பது ஏற்படுகிறது.

சிறுவர்களுக்குக் கவாத்துப்பழக்கம் ஒழுங்காய் நடந்துகொள்வதில் 'அ, ஆ' கற்றுக்கொள்வதாகும். சாரணச் சடங்குகளில் அடிக்கடி வரிசை ஒழுங்கு, வரிசை வரிசையாகச் சேர்ந்து நடந்துபோவது (Marching), நீண்ட தூரம் நடையாகச்செல்லும் (hiking)போது நடையைக் குதிப்பாகவும், தாண்டாகவும், பாய்ச்சலாகவும் மாற்றிக் கொண்டு செல்வது—இவைகளெல்லாம் செய்யவேண்டிவரும். இவைகளை ஒழுங்காகச் செய்தால் மனதை உத்ஸாகப்படுத்துவதோடு, பார்ப்பவர்களுக்கும் உத்ஸாகத்தை ஊட்டும்.

சாதாரணமாய் இடம், வலம், முன் பின்னுகத் திரும்புதல் (right, left, and right about turn), நேர், தளர்தல் (alert, stand-at ease), இடத்திலும் வலத்திலும் பத்திப் பிரிதல், சேர்தல்; நடையில் இதே மாதிரி செய்தல், கால் போடுதல் (Mark time) - இவைகளைச் சிறிதும் தயக்க மின்றி, பிழையின்றிச் செய்யப் பழக்க வேண்டும். 4 முதல் 8 எண்ணிக்கை வரையில் ஒரே மாதிரியாக எல்லாரும் 5, 6, வரையில் அங்க அசைவுகள் செய்யவும் பழக்க வேண்டும். திரளாகச் செய்யும் போது இது மிகவும் அழகாயிருக்கும். ஆகேலா சாமர்த்திய முள்ளவரானுல் இந்த அசைவுகளை ஏதாவது ஒரு பாட்டுக்குத் தாளமாக இசைத்து செய்வித்தால் இன்னும் சிறப்பாக விருக்கும்.

தேகப்பயிற்சி செய்யும் போது பிள்ளைகள் நேராக நிமிர்ந்து, மார்பை முன்னுல் தள்ளி, ஒரே முகமாய்ப் பார்த்து, தேகத் தளர்வின்றி நிற்கப் பழக வேண்டியது மிகவும் அவசியம்.

(ஆ) நிறை கூடல் :—சாதாரணமாக ஒரு சடங்கோ, அல்லது வேறு எதற்காகவோ ஆகேலாவைச் சுற்றி சிங்கக் குட்டிகள் அடிக்கடி கூட நேரும். ஆனுல் சிங்கக் குட்டிகள் எல்லாரும் தயாராகயிருக்க மாட்டார்கள். ஒவ்வொருவனும் ஒவ்வொரு மூலையில் ஏதாவது செய்து கொண்டிருப்பான். இவர்களை யெல்லாம் ஒரு சங்கேதத்தின் மூலமாய் ஒன்று கூட்டவேண்டும். இப்படி ஒன்று கூட்டுவதை ஒரு பெரிய தமாஷாவாகச் செய்ய வேண்டும். இதிலிருந்து பிள்ளைகளுக்கு வேடிக்கை மட்டு மல்ல, ஒரு புதிய வேகமும் அவர்கள் மனதில் உண்டாக வேண்டும். கூட்டத்தில் நடக்கப் போகும் காரியத்திற்கு இது ஒரு சிறப்பான ஆரம்பக் குறியாகவும் ஆகும்.

இப்படிக் கூடும் கூட்டம் எப்போதும் வட்டமாகவே இருக்க வேண்டும். அதற்காக ஆகேலா முன்னுடியே முதல்வர்களைக் கொண்டு வட்டத்துக்குள் வட்டமாக இரண்டு வட்டங்கள் போட்டுக் கொள்ள வேண்டும். ஒன்று நெருங்கி நின்று மனக் கலப்போடு பேசுவதற்கு; இன்னென்று வணக்கம், கர்ஜனை முதலியன செய்வதற்காக. இவ்வட்

ட்ங்களை, கற்களை புதைத்தோ, சுண்ணும்பினாலோ, அல்லது வேறு நிறத்தைக் கொண்டோ போட்டு அழியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வட்டத்தின் மையத்தில் கொடிமரம் நாட்டப்பட வேண்டும்.

சிறுவர்களைக் கூப்பிடுவதற்கும், அவர்கள் அதைக் கேட்டு ஓடி வருவதற்கும், நாம் சாதாரண வாழ்க்கைப் பழக்கத்தைப் பின்பற்றினால் உபயோகமில்லை. அது கிளர்ச்சியைத் தராது. கூப்பிடுவதும், அதைக் கேட்டு ஓடிவருவதும் காட்டு வாழ்க்கையை நினைப்பூட்டுவதாக இருத்தல் வேண்டும். அதில் ஒரு விசித்திர உணர்ச்சியும், குசாலும் இருக்க வேண்டும்.

காட்டில் மிருகேந்திரனுகிய சிங்கம் மற்ற மிருகங்களையெல்லாம் தன்னிடத்திற்கு வரும்படி அழைப்பதற்காக கர்ஜிப்பதுபோலும், அதைக்கேட்டு மிருகங்கள் தத்தம் இயற்கைக்குரிய ஓசையைச் செய்து கொண்டு ஓடிவருவதுபோலவும் அமைந்தால் எவ்வளவு வேடிக்கையாயிருக்கும்! (ஹிந்துஸ்தான் சாரணப் பயிற்சியில் இதைக் கைவிட்டு விட்டதைப்பற்றி நான் வருந்துகிறேன்). மிருகங்களின் உறுமல், ஊளையிடுதல், கத்தல், கர்ஜித்தல் இவைகளைப் பின்பற்றுவதில் பிள்ளைகளுக்கு ஆவலான பிரியம் உண்டு. இந்த சுபாவத்தை வெளிப்படுத்திக்கொள்ள நிரைக்கூட்டம் ஒரு நல்ல சந்தர்ப்பம்.

ஆகேலா நிரைவட்டத்தின் மத்தியில் நின்றுகொண்டு, பிள்ளைகளைக் கூப்பிடுவதற்கு அடையாளமாக 'ப்யாக், ப்யாக், ப்யாக்' என வாயினாலோ அல்லது ஊது குழலாலோ ஜாடை செய்தவுடன், சிங்கக் குட்டிகள் என்ன வேலை செய்துகொண்டிருந்தாலும், அதை அப்படியே விட்டுவிட்டு, அணி அணியாக தாங்கள் பழகிக்கொண்டிருக்கும் ஏதாவது ஒரு விலங்கு ஒலியைச் செய்துகொண்டு, முதல்வன் முன்னுகவும் மற்றவர் பின்னுகவும் ஓடிவரவேண்டும். மிருக ஒலி கூடியவரையில் இயற்கையாக இருக்கவேண்டும். மனம்போன்றவாறு கத்துவது கூடாது. அந்தந்த அணி அதனதன் ஒலியைத் தனியாகச்செய்துப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும்.

வட்டத்தை யடைந்ததும் சிங்கக்குட்டிகளெல்லாம் (இன்னும் சிங்கக்குட்டிகளாகாவிட்டாலும் அப்பெயரையே உபயோகிக்கலாம்) வட்டக் கோட்டைச் சுற்றி முழங்காலிட்டு உட்கார்ந்து இரண்டு கைகளையும் கால்களுக்கிடையே தரையில் ஊன்றிக்கொண்டு, ஆகேலாவுக்குத் தங்கள் மரியாதையைத் தெரிவிப்பதுபோல், இன்னும் அதிக உத்சாகத்தோடு கத்தவேண்டும். ஆகேலா 'ப்யாக்' என ஒரு தரம் உரக்கச் சொன்னதும் நிசப்தமாய் விடவேண்டும். 'அணி நேர்' என்றதும் எல்லாரும் எழுந்து ஒழுங்காக நிற்க வேண்டும். முதல்வர்கள் மட்டும் உடனே ஒரு அடி முன்னுல் வந்து ஆகேலாவுக்கு வந்தனம் செய்யவேண்டும். வந்தனம் செய்தானதும், அவர்கள் தங்கள்

இடத்திற்குப்போய் அணியோடு சேர்ந்து நிற்கவேண்டும். ஹிந்துஸ்தான் சாரணர்கள் ஆகேலா ஊதல் செய்ததும் 'ஜேய், ஜேய்' என்று ஒலித்துக்கொண்டு வந்து வட்டத்தைச்சுற்றி நிற்கிறார்கள். இதைக் கூட்டம் கலைந்து போகுமுன் செய்வதற்காகமட்டும் வைத்துக்கொண்டு, நிரைக் கூடுவதற்குப் பழைய முறையையே அனுஷ்டிக்கலா மென்று எனக்குத் தோன்றுகிறது.

(இ) சிம்மகர்ஜனை:—இதுவும் இரண்டுவிதமாகச் செய்யப்பட்டு வருகிறது. இதுமட்டுமாவது ஒரேவிதமாகத்தான் செய்யப்பட வேண்டு மென்பது என் கருத்து. 'நாங்கள் எங்கள் கடமையைச் செய்வோம்' என்பதைவிட, உலகமெங்கும் சிங்கக்குட்டிகள் சொல்வது போல 'நாங்கள் எங்கள் முழுத்திறமையோடு உழைப்போம்' என்று கர்ஜித்து, உலகத்தின் சிங்கக்குட்டிகளோடு ஒற்றுமைப்படுவது சிலாக்கிய மல்லவா?

நேர் பாங்கில் நிற்கும் சிங்கக்குட்டிகளைப் பார்த்து ஆகேலா 'கர்ஜிக்கத் தயார்' என்று கட்டளையிட்டதும், சிங்கக்குட்டிகள் ஒரு குதி குதித்து சிங்கம் பாய்வதைப்போல நிற்கவேண்டும். தலைவன், மெதுவாக நீட்டி 'ஆ............' என்று ஆரம்பித்ததும் மற்றவர்களெல்லாரும் அதில் சேர்ந்து கொள்ள வேண்டும், "கே............" என்ற நீட்டலில் திடீரென குரலை உயர்த்தி 'லா.........' வில் மறுபடியும் சடக்கென்று தாழ்த்தி, 'ஆ.........கே............லா............' என்பதை அழுத்தந் திருத்தமாகச் சொல்லவேண்டும். உடனே தொடர்ந்து "நாங்....கள், முழுத்............திறமையோ......டுழைப்போம்" என்று ஒரே குரலாய் நீட்டல்களோடு சொல்வதில், 'டுழைப்போம்' என்னும் கடைசி இசையை இடி இடித்தாற்போல் ஒருமித்துக் கர்ஜிக்கவேண்டும்.

ஆகேலா 'உங்கள் முழுத் திறமையோடு உழைப்பீர்களா?' என்று கேட்கும் முறையில் சுருக்கமாக 'உமுதி, உமுதி, உமுதி' என மூன்று தரம் உரத்த குரலில் கர்ஜிப்பார். மூன்றாவது 'உமுதி' யைக் கேட்டதும் சிங்கக் குட்டிகள் பதிலுக்கு 'எமுதி, எமுதி, எமுதி' என்று வானை இடிக்கும் படி கர்ஜிக்க வேண்டும். கர்ஜித்துக் கொண்டே நேர்ப் பாங்கிற்கு மறுபடியும் வந்து (அதாவது கடைசி 'எமுதி' சொல்லும் போது) சாரண வந்தனத்தைச் செய்து கொண்டு ஒழுங்காக நிற்க வேண்டும். 'தளர்க' என்றதும் கையை விட்டுவிட்டுச் சாதாரணமாய் நிற்கவேண்டும்.

(தொடரும்)

# ஜயதேவர் சரித்திரம்

ஜயதேவர் என்பவர் மகா சிறந்த பக்தர். அவர் ஜகன்னாத க்ஷேத்திரத்திலுள்ள ஒரு பிராமணர். அவரைப் பொறுமையின் அவதாரம் என்று சொல்லலாம். அவருடைய மனைவி பத்மாவதி என்பவள். அவள் மிகவும் உயர்ந்த குணங்களுடையவளாயும் மகா பதிவ்ரதாசிரோமணியாயும் விளங்கி வந்தாள். ஜயதேவர் தினந்தோறும் பஜனை செய்வதிலும், பிறருக்குச் சொல்லிக் கொடுப்பதிலும் காலம் செலுத்தி வந்தார். அவர் கடவுள்முன் அஷ்டபதிகள் பாடும்பொழுது கடவுள் திருப்தியடைந்து தலையை அசைத்ததாக அவர் உணர்ந்தாலொழிய அவர் எழுந்திருப்பதில்லை என்று ஜனங்கள் சொல்வது வழக்கம்.

ஒரு நாள் கிரௌஞ்ச தேசத்து அரசன் அவரைத் தன் அரண்மனைக்கு அழைத்தான். தன் காரியங்களை முடித்துக்கொண்ட பிறகு, பணத்தால் தனக்குக் கெடுதல்கள் உண்டாகுமாதலால் அவை வேண்டாமென்று சொல்லியும் கேளாமல், அரசன் அவருக்கு ஏராளமான பணமும் வெகுமதிகளும் கொடுத்து அனுப்பினன். வழியில் ஒரு கொள்ளைக் கூட்டத்தார் ஜயதேவரை எதிர்த்து, திரவியங்களைக் கொள்ளைகொண்டு அவருடைய மனிதர்களைக் கொன்று, ஜயதேவரின் கைகால்களை வெட்டி அவரைக் கிணற்றில் எறிந்துவிட்டுப் போய்விட்டார்கள்.

ஜயதேவர் தனக்கு நேர்ந்த உபத்திரவத்தைக் கவனிக்காமல் சாவில்லாதவரும் உபத்திரவங்களுக்கெல்லாம் அதீதருமான கடவுளோடு ஒருவராக இருக்க ஆரம்பித்து அந்த நிஷ்டையில் இருந்துவிட்டார். பக்கத்து தேசத்து அரசன் காட்டிற்கு வேட்டையாட வந்தபொழுது தாக சாந்திக்காக அக்கிணற்றண்டை வந்தபொழுது கடவுளை தியானித்துக் கொண்டிருக்கும் அங்கஹீனரான ஜயதேவரைப் பார்த்தான். அவருடைய ஆத்மஜோதி மிகவும் ப்ரகாசமாயிருந்தது. கிணறு முழுவதும் பிரகாசத்தினல் நிரம்பி இருந்ததைப் பார்த்து அரசன் மிகவும் ஆச்சரியப்பட்டான். ஜயதேவரை அவன் வெளியே எடுக்கச் செய்து அவர் அங்கஹீனமாயிருப்பதற்குக் காரணங்களைத் தெரிந்துகொண்டு அவரை அரண்மனைக்கு அழைத்துப் போய் தன் குருவாக நியமித்துக்கொண்டான்.

இதன் மத்தியில் பத்மாவதியானவள் தன் கணவனையே நினைத்துக்கொண்டு, பதிவ்ரதை செய்யவேண்டிய விரதங்களைச் செய்துகொண்டு தன் பர்த்தாவின் வருகையை எதிர்பார்த்திருந்தாள். அரசன் செய்தி

அனுப்பி அவளை வரவழைத்துத் தன் பர்த்தாவுடன் இருந்துகொண்டு அரசிக்குப் போதகியாக இருக்கும்படியும் ஏற்படுத்தினான். இந்தப்படி கொஞ்சகாலம் நடந்தது.

ஒருநாள் ஜயதேவரைக் கொள்ளையடித்து உபத்திரவித்த திருடர்கள் புதிதாக ஏதாவது திருடலாமென்று எண்ணி போலி சன்னியாசி வேடம் தரித்து அரண்மனைக்கு வந்தார்கள். வழக்கம்போல் அரசன் அந்த போலி சன்னியாசிகளை உபசரித்தான். இது விஷயங்களில் ஜயதேவர் அதிகாரியானதால் அவர்களைக் கவுரவிக்கும்படி அரசன் அவரைச் சொன்னான். உடனே ஜயதேவர் அத்திருடர்களைக் கண்டு கொண்டார். அவர்களும் இவரை அறிந்துகொண்டனர். தங்கள் கெட்ட வழிகளைப்பற்றி வருத்தமடைந்து நல்ல வழியில் மாறி சன்னியாசிகளாகி இருப்பார்கள் என்று ஜயதேவர் எண்ணி அவர்கள் கேட்ட ஏராளமான பணத்தைக் கொடுத்தனுப்பினார். ஆனால் அவருடைய நடத்தைகள் சந்தேகத்தை உண்டாக்கின. இதைக் கவனித்த மந்திரி அதன் காரணத்தைக் கேட்டான். அதற்கு அத்திருடர்கள் சொன்னதாவது: "ஒன்றுமில்லை; இந்த ஜயதேவர் பக்கத்தூர் அரசனின் குருவாக இருந்தார். அப்பொழுது அரசகுமாரனைக் கொன்றுவிட்டார். ஆகையால் அரசன் இவருடைய கைகால்களை வெட்டிப் போட்டு தன் ராஜ்ஜியத்தை விட்டுத் துரத்திவிட்டான். இந்த அரசனுக்குக் குருவாக அவரை மறுபடி இங்கு காண அவர்களுக்கு கலக்கம் உண்டாயிற்று." அவர்கள் இவ்வார்த்தைகளைச் சொன்னதுதான் தாமதம் உடனே பூமி பிளந்தது. அவர்களை அப்படியே விழுங்கிவிட்டது.

ஜயதேவர் இதைக்கண்டு தான்தான் இதற்குக் காரணம் என்று மனம் வருந்தி அவர்களை மன்னித்துத் திரும்பவும் உயிர்ப்பிக்கும்படி, பூமி தேவியை வேண்டிக் கொண்டார். அவருடைய பிடிவாதத்தையும் அந்தரங்க பக்தியையும் கண்டு கடவுள் அவர்முன் தோன்றி, அந்த மூர்க்கர்கள் கொஞ்சம்கூட தயைக்குப் பாத்திரர்களில்லாதிருந்தபோதிலும் ஜயதேவரின் பொருட்டு அவர்களை மறுபடி பிழைப்பித்துவிட்டதாகவும், அரசனுக்கும் ஜயதேவரின் பொருட்டு தரிசனம் அளித்ததாகவும் கூறினார்.

அரசிக்கு பத்மாவதி தர்ம சாஸ்திரங்களை எடுத்துக் கூறி வந்தாள். ஒருநாள் விவாதத்தில் தன் பர்த்தாவின் மரணத்தைக் கேட்டவுடனே பதிவிரதையான ஸ்திரீ இறந்துவிடுவாள் என்று பத்மாவதி அரசியிடம் கூறினாள். இதை அவள் நம்பாமல் பரீக்ஷிக்க எண்ணினாள். அவள் செய்த ஏற்பாடாவது: ஒருநாள் அரசனும் ஜயதேவரும் காட்டுக்குப் போயிருந்தபோது ஜயதேவருடைய துணிகளை ஏதோ ஒரு பிராணியின் ரத்தத்தில் நனைத்து பத்மாவதி நம்பும்படி அவள்முன் காட்டினாள். அத்துணிகளைப் பார்த்தவுடனே, "ஹா! நாதா!" என்று அலறிக்

கொண்டு கீழே விழுந்து பிராணனைத் துறந்தாள். அரசி இன்னது செய்வது என்று தெரியாமல் திகைத்தாள்.

அரசன் ஊருக்குத் திரும்பி வந்து பார்க்கும்பொழுது எங்கும் நிச்சப்தமாயும், மாறுதலாயும் இருக்கக்கண்டு ஆச்சரியமடைந்தான். அரண்மனைக்கு ஓடினன். அங்கு பத்மாவதி இறந்து கிடப்பதையும் ஸ்திரீகள் அழுதுகொண்டிருப்பதையும் கண்டான். உடனே அரசியை வினவ அவள் நடந்த விருத்தாந்தத்தைச் சொன்னாள். அரசனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது. "இப்பொழுது ஜயதேவர் தன் பிரியமுள்ள பதிவிரதையான மனைவியை இழந்துவிட்டார். அதற்கு நீதான் காரணம். ஆகையால் நீயும் இறக்க வேண்டியதுதான்" என்று சொல்லிக்கொண்டே அவள் தலையை வெட்டக் கத்தியை உருவினன். உடனே ஜயதேவர் தனக்கு கைகால்கள் இல்லை என்பதை மறந்து அரசன்பேரில் பாய்ந்து அக்கொலையைத் தடுத்தார். அவர் அப்படி பாய்ந்தவுடனே ஆச்சரியகரமாக அவருடைய கைகளும் கால்களும் சரியாக உண்டாய் விட்டன. அரசியைக் கொலை செய்யாமலிருக்கும் படியும், ஸ்திரீயைக் கொல்வது மிகவும் பாதகம் என்றும் அரசனுக்கு எடுத்துச் சொன்னார். அதை அரசன் கவனிக்கவில்லை. அவன் ஜயதேவருக்கு எப்படி கை கால்கள் திரும்ப வந்தனவோ அப்படியே பத்மாவதியையும் பிழைப் பூட்டவேண்டும். இல்லையேல் அரசி இறக்க வேண்டியது தான் என்று கூறினன். ஆகையால் ஜயதேவர் கடவுளைக் குறித்து 'ஸ்திரீஹத்தியைத் தடுக்கும் படிக்கும் பத்மாவதியை உயிர்ப்பிக்கும் படிக்கும் பிரார்த்தித்தார். என்ன ஆச்சரியம்! தூக்கத்திலிருந்து எழுபவள் போல பத்மாவதி எழுந்திருந்தாள். கடவுள் ஜயதேவரின் விருப்பத்திற் கிணங்கி அனுக்கிரகம் செய்தார்.

அந்திய காலத்தில் ஜயதேவரும் பத்மாவதியும் கடவுளோடு ஒன்றாக ஐக்கிய மானார்கள்

# சுகாதார விதிகள்

V. N. கிருஷ்ணசாமி, ஆசிரியர், செங்குந்தர் பாடசாலை, துறையூர்.

"அயோத்தி யென்றொரு ராஜ்ஜியமாம்" என்ற மெட்டு.

1. பள்ளிக்குச் செல்லும் பாப்பாவே
பகாவோர் விஷயம் கேட்பாயே.

2. அழுக்கைப் போக்கி தினந்தோறும்
குளிக்கும் பழக்கம் கொள்வாயே.

3. வார மிரு முறை தலைமுழுக்கு
வண்ணமாய் கொள்வாய் தவறாமல்

4. ஆடை சுத்தம் வேண்டுமே,
அன்னமும் சுத்தம் வேண்டுமே.

5. தினமு மிருமுறை உன்பற்களை
தீட்டும் பழக்கம் கொள்வாயே.

6. கனியாப் பழங்களை புசியாதே
கண்ட விடங்களி லுமியாதே.

7. விரலில் நகத்தை வளர்க்காதே
வேளைத் தவறி யுண்ணாதே.

8. அதிக நேரங்கண் விழியாதே
அதிகாலையியெழுந் திடுவாயே.

9. வருட மிருமுறை வயிர்சுத்தம்
வகையுடன் செய்து கொள்வாயே.

10. கூறிய வழக்கத்தைக் கையாண்டால்
குவலயத்தில் சுகமாய் வாழ்வாயே.

(பள்ளிக்குச் செல்லும்)

# சிறுவர் பகுதி

## விடுகவிகளும், வார்த்தை விளையாட்டும்


### விடுகவிகள்

குழந்தைகளே.

நீங்கள் ஒருவர்க்கொருவர் "புதிர்" அல்லது விடுகவிகள் சொல்லி விடுவித்ததுண்டா? பெண் குழந்தைகள் முக்கியமாக இவ்விளையாட்டுகளில் பிரியம் கொள்ளுகிறார்கள். பையன்களுக்கும் விடுகவிகள் படித்து விடையளிப்பதில் மிகப் பிரியம் உண்டு. நான் சிறுவனாக இருந்த பொழுது கோயிலில் மணலில் என் தோழர்களுடன் உட்கார்ந்து விடுகவிகளும் வார்த்தை விளையாட்டுகளும் விளையாடுவது வழக்கம். மணலில் ஓடி ஆடிக் குதித்து களைப்புற்று சற்றே ஓய்வு எடுத்துக்கொள்ள உட்காரும்பொழுது இம்மாதிரி குதூகலமான விடுகவிகள் போடுவதிலும் விளையாட்டுக் கணக்குகள் போடுவதிலும் பழகுவது நல்லது. அம்மாதிரி விளையாட்டுகளில் சிலவற்றை இங்கே எழுதி வருகிறேன். நீங்களும் அவைகளைப் படித்து சந்தோஷிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
உங்களது பிரியமுள்ள
**ஜகந்நாதன்**

அடியிலுள்ள படங்களைப் பார்த்து அவற்றின் கீழ் காணப்படும் விடுகவிகளையும் படியுங்கள். விடுகவிகளுக்குச்



சரியான விடையை யோசித்தாவது படங்களைப் பார்த்தாவது கண்டு பிடியுங்கள்.

1. கதிரவன் கிரணத்தைத் தாக்கும்; வானத்தைத்
தடுக்கும்; கடுங்காற்றைக் கண்டால் கவிழ்ந்து போகும்;
மாட்டை வெருண்டு ஓடச் செய்யும்; கைத்தடியும்
ஆகும்; அது என்ன?

2. என் கூடவேயிருப்பான்; என்னைப் பின் தொடருவான்
ஓடுவான், ஒளிவான், குதிப்பான் என்னைப் போலே;
என்னை ஒத்திருப்பான்; காலை மாலை நீண்டிடுவான்;
நடுப்பகலில் குன்றிடுவான்; நீளத்தை அளக்கப் பொ
[ழுதுரைப்பான்
என்தோழன் யாரென்று சொல்லிடுவீர் பாலரே.

3. இரட்டைக் குதிரை ஜோடியாகவே போகும்;
ஒன்று இல்லையேல் மற்றொன்று செல்லாது;
முள்ளிலும் போகும் கல்லிலும் போகும்;
மேட்டிலும் ஏறும் பள்ளத்திலும் இறங்கும்
தண்ணீரைக் கண்டால் தயங்கி நிற்கும்.

4. நிலத்திலும் இருக்கும், நீரிலும் இருக்கும் ஆமையல்ல;
மழைக்காலத்திலே முட்டை இடுவான்; பிறக்கும்போ
[து வாலோடு பிறப்பான்;
வளர வளர வாலும் சுருங்கும்; வால் சுருங்கக் கால்
[இரண்டு நாலாகும்
நாலு காலால் தத்திதத்திச் செல்லுவான் நாக்கு நீட்
[டிப் பூச்சியைப் பிடிப்பான்;
வாட்டு வாட்டு என்று வயிறு கிழிய மழையில் கத்து
[வான்; அவன் யார்?

5. மானத்திலிருந்து வரும் பன்னீராயிரம் ஆறு,
பூமியில் வந்து ஆறு நூறாகப் பெருகும்,
நூறு ஆறெல்லாம் ஓர் ஆற்றில் வந்து பெருகும்,
அது என்ன?

6. வெயில் எறிப்பதைக் கண்டேன், மானம் மூடுவதைக் [கண்டேன்
தலையில் ஜலம் விழக்கண்டேன், பட்டென வானம் நிற்க
வர்ண வர்ணச் சேலைகட்டிய மாதர் எழுவரைக் கண் [டேன்
எழுபேரும் வில்போல் வளைந்து ஆடக் கண்டேன்
ஆடினதும் ஓடி மறையக் கண்டேன்.

7. கிணற்றில் தங்கத் தாம்பாளம் பிரகாசிக்கிறது,
பத்து பாதாளக் கரண்டி போட்டாலும் எடுக்க முடிய [வில்லை.

8. காய் கனி உதிர்க்கும் கைக்கு அழகாகும்,
முள் அகற்றும், முதியோர்க்கு மூன்றும் காலுமாகும்;
தனி வழியில் பயம் போக்கும் பாம்பு அடிக்கும்,
அது என்ன ?


## வார்த்தை விளையாட்டு

முப்பிரிவு பதங்கள் :

ஒரு கதை சொல்லும் பொழுது "இப்பொழுது தான் கதை ஆரம்பம் ஆயிற்று," "கதை மத்தியில் இருக்கிறது," "கதை முடிகிற சமயம்" என்று சொல்லுகிறதுண்டு. அதே மாதிரி "உன் வீடு எங்கே?" என்று கேட்டால் "தெருவின் கோடியில் இருக்கிறது, நடுவில் இருக்கிறது அல்லது முதலில் இருக்கிறது" என்றும் சொல்லுவதுண்டு.

படத்தைப் பாருங்கள் : முதல் படம் மனிதனின் உச்சி, அரை, உள்ளங்கால் என்றும் மூன்று பாகங்களைக் காட்டுகிறது.


அதே மாதிரி மற்றப் படங்கள் ஒரு ஆற்றின் மூன்று பாகங்களையும், ஒரு பகலின் மூன்று பாகங்களையும், கடைசி ஒரு கரும்பின் மூன்று பாகங்களையும் முறையே தெரிவிக்கின்றன. அம்மாதிரியே அடியிலுள்ள மூன்று பிரிவு வார்த்தைகளைக் கவனியுங்கள்.




| விஷயம் | முப்பிரிவு பதங்க்ள் | | |
|---|---|---|---|
| கடவுள் | பிர்ம்மா | விஷ்ணு | சிவன் |
| — | படைத்தல் | காத்தல் | அழித்தல் |
| காலம் | ஆதி | மத்தி | அந்தம் |
| வீடு | முன் உள் | நடு உள் | பின் உள் |
| செலவு | உதாரி | கணக்கன் | கருமி |
| சரக்கு | முதல் தரம் | நடுத்தரம் | மட்டம் |
| மாணாக்கன் | உத்தமன் | மத்தியமன் | அதமன் |
| காலம் | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| சாயம் | கெட்டி | நடுத்தரம் | மங்கல் |
| மலை | உச்சி | நடுப்பாகம் | அடிவாரம் |

இம்மாதிரி நீங்களும் மற்ற சில விஷயங்களில் காணப்படும் முப்பிரிவு பதங்களைச் சேருங்கள்.

எதிரிலுள்ள படத்தைப் பாருங்கள். ஓர் அவரைக் கொடி. ஒரு காம்பில் மூன்று மூன்றாக இலைகள் காணப் படும். ஒரு காம்பு மனிதன் என்ற விஷயத்தைக் காட்ட அதன் மூன்று இலைகளும் உச்சி, அரை, உள்ளங்கால் என்ற முப்பிரிவு வார்த்தைகளைக் காட்டும். அதே மாதிரி பகல் என்ற காம்பிலுள்ள மூன்று இலைகளும் காலை, உச்சி, மாலை என்ற முப்பிரிவு பதங்களைக் காட்டுகின்றன. நீங்கள்




இம்மாதிரி விஷயங்களையும் அவைகளுக்குப் பொருத்த மான மூன்று பிரிவு பதங்களையும் எழுதி வைத்துக் கொள் ளுங்கள். இம்மாதிரி தரையில் ஒரு பெரிய அவரைக் கொடிபோல் எழுதுங்கள். இலைக் காம்பில் ஒரு விஷயத் தையும் காம்பிலிருந்து பிரிகின்ற மூன்று இலைகளில் விஷ யத்திற்குப் பொருத்தமான முப்பிரிவு பதங்களையும் வைத்து விளையாடுங்கள். யார் நிரம்ப வார்த்தைகள் சேர்க்கிறார் கள் என்று பார்ப்போம்.

# செங்கற்பட்டு ஜில்லாபோர்டு ஆசிரியர்கள் மாநாடு, சைதாப்பேட்டை

26—4—1941.

மேற்படி ஆசிரியர்கள் மாநாடு இவ்வூர் டீச்சர்ஸ் காலேஜில் ஸ்ரீ. ஜி. எல். லோபோ டிவிஷனல் இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் 800க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கூடி இருந்தார்கள்.

ஸ்ரீ. பி. என். கலியாணசுந்தரம் அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பட்டதும், ஸ்ரீ. சி. பாலசுப்ரமண்யம் அவர்களால் வரவேற்பு நல்லிதழ் வாசிக்கப்பட்டது. செங்கற்பட்டு ஜில்லாபோர்டு தலைவர் ஸ்ரீ. எ. எஸ். துரைசாமி ரெட்டியார் அவர்கள் வரமுடியாததினால், ஜில்லாபோர்டு அங்கத்தினர் ஸ்ரீ. டி ஷண்முகம் பிள்ளை அவர்கள் இம் மாநாட்டைத் திறந்துவைத்து, உபாத்தியாயர்கள் பலமுறை மாநாட்டைக் கூட்டி தீர்மானங்களை நிறைவேற்றி இருந்தாலும் பலன் கிடைக்காததைப்பற்றி தாம் வருந்துவதாகவும், இம்மாநாட்டின் பயனாகவாவது அவர்களுக்குப் பயன் கிடைக்குமென்று நம்புவதாயும் கூறினார்.

பிறகு, 1940ம் வருஷத்தில் ஒரு சமபள உயர்வு கொடுத்த காலத்தில் விடுபட்டுப்போன (1934—38) நான்கு வருஷ சர்வீஸை கணக்கிட்டுக் கொடுக்கும்படிக்கும், உத்தியோகத்தில் அமர்ந்த தேதி முதல் ஸ்கேல்படி சம்பள உயர்வு கொடுக்கும் படிக்கும், தற்காலிக சம்பள வெட்டு எனச் சொல்லி நிரந்தரமாக இருக்கும் சம்பளவெட்டை உடனே நீக்கும்படிக்கும், ஸீனியாரிடி பிரகாரம் உத்தியோகம் கொடுக்க ஒரு ஸிவில்லிஸ்டு தயார்செய்துவைக்கும்படிக்கும் மெமோரியல் ஒன்று மேற்படி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு ஸ்ரீ. பி. டி. ஜெகன்னாதன் அவர்களால் வாசிக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

பின்னர், எம். எஸ். சபேசன் அவர்கள் மெமோரியலை வைத்துக் கொண்டு, முன்பு எல்லா எய்டெட் பாடசாலைகளும் கூக்குரல் போட்டுக் கொண்டிருந்தன. இப்போது எங்குபார்த்தாலும் போர்டுஸ்கூல் ஆசிரியர்கள் கஷ்டம் சொல்ல முடியவில்லை. இதைப் போக்க ஜில்லா போர்டாரும், கவர்ண்மெண்டாரும் உதவி செய்யவேண்டும். ஆசிரியர்களுக்கு இப்படிப்பட்ட கஷ்டம் கொடுக்க யாருக்கும் இஷ்டமில்லை. ஆனால், வேப்பமரத்திற்கு இயற்கையாகவே கசப்பு அமைந்திருப்பது போல, ஆசிரியர்கள் அனுபவித்துவரும் தாழ்ந்த பரிதாபகரமான நிலைமையானது யாருடைய சாபமோ என்னமோ தெரியவில்லை. அது யாருடைய தப்பு என்றால் அது தான் எனக்குத் தெரியவில்லை. எந்நேரமும் இப்படிப்பட்ட கஷ்டத்தையே ஒரு ஆசிரியர் சிந்தித்துக் கொண்டிருப்பாரானால் புதிய பாடதிட்டத்தை வைத்துக்கொண்டு என்ன செய்யமுடியும்? அதில் கூறப்பட்டபடி உபகரணங்கள் தயார்

செய்ய காகிதம் முதலியவற்றிற்கு என்ன செய்வார்கள்? சிலபஸ்ஸை முடித்தாய்விட்டது என்று சொல்லலாமே ஒழிய அதனால் ஒரு பிரயோசனமும் ஏற்பட்டிராது. உங்களுடைய குறைகளை வெளியில் சொன்னால் தான் தோஷமே ஒழிய உங்கள் அதிகாரிகள் உள்ள இடத்தில் சொன்னதைப்பற்றி யாருக்கும் கஷ்டம் இல்லை. ஆனால், இதையே பன்னிப்பன்னி பேசவேண்டாம். எங்குபார்த்தாலும் 220 நாட்களுக்குப் பதிலாக 200 நாட்கள் வேலை செய்ய அனுமதி கேழ்க்கிறார்கள். நீங்களோ, அவ்வாறு கேழ்க்காமல், எங்களுக்கு உரிய சம்பளத்தைக் கொடுங்கள் 365 நாட்களும் வேலை செய்யத் தயார் என்று சொல்லுகிறீர்கள். இனி இப்படிப் பட்ட கஷ்டங்களை எல்லாம் போக்க அரசாங்கம் முன்வரவேண்டும். உங்களது ஜில்லாபோர்டு மெம்பரான. ஸ்ரீ. டி. ஷண்முகம்பிள்ளை அவர்களும் முதலில் தெரிவித்திருக்கிறார்கள். ஆகையால், என்னேரமும் சம்பளம், சம்பளமென்று சொல்லிக்கொண்டிருக்கும் குறையை இங்குள்ள பெரியோர்கள் பார்த்துக்கொள்ளுவார்கள். நீங்கள் அவற்றை எல்லாம் மறந்து, தேரும் போய்க்கொண்டே இருக்கட்டும், ரிபேரும் பின்னாலேயே செய்துகொண்டுவரட்டும் என்று ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் சொல்வதைப்போல, எழுதப்படிக்கத் தெரியாத குறைகளைப் போக்க முன்வரவேண்டும். கையெழுத்து போடத் தெரிந்தால் மட்டும் எழுதப் படக்கத் தெரிந்ததாக நினைக்கக்கூடாது. ஐந்தாவது வகுப்புவரை படிக்க வேண்டும். கிராமாந்தரங்களுக்குத் தகுந்த முறையில் தான் பாட திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அங்கு 8வது வகுப்பு முடித்த ஒருவனை ஹைஸ்கூல்களில் 4வது பாரத்தில் சேர்க்கவேண்டும் என்பது தகுதியானது அல்ல. புதியபாட திட்டம் நன்கு பரிசீலனை செய்து ஏற்படுத்தி இருப்பதால் சிரத்தையுடன் போதித்து உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளை வருங்கால நல்ல பிரஜைகளாக்க வேண்டிய பொறுப்பு உங்களிடம்தான் இருக்கிறதென்று சொல்லி முடித்தார்.

அடுத்தபடியாக கோஆபரேடிவ் சொஸைடி டிப்டி ரிஜிஸ்தரார் ஸ்ரீ. எம். ஏ. அப்துல் அஜீஸ் சாகிப் அவர்கள் ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்குத் தனிமையாக ஒரு கோஆபரேடிவ் சொஸைடி இருக்க வேண்டியது அவசியம் என்றும், அதை ஏற்படுத்த வேண்டிய வழிகளையும் விளக்கி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார்.

பின்னர், தலைவர் அவர்கள் அதிகச் சம்பளம் பெருவதற்கோ, சர்வீஸ் கண்டிஷன்களை விருத்திக்குக் கொண்டுவருவதற்கோ இம்மாதிரி மாநாட்டை நீங்கள் கூட்டுவது பண நஷ்டமென்றே சொல்வேன். உங்களுடைய தொழில் முறைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு நீங்கள் மாநாடுகளைக் கூட்டலாம். நீங்கள் சில உபாத்தியாயர்கள சம்பளங்களைப் பற்றி குறை கூறுகிறீர்கள். வாஸ்தவமான குறைகள் இருந்தால் அவை கட்டாயம் தீர்க்கப்படுமென்று நான் உறுதி கூறுகிறேன். உதவி பெற்ற பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் நிலைமையையும் உங்களுடைய நிலைமையையும் கவனித்தால் உங்களுடைய நிலைமை

எவ்வளவோ மேலென்றே சொல்லலாம். உபாத்தியாயர்களுக்குச் சம்பளம் குறைவு. ஆனால் வேலை மாத்திரம் ஒருவிதத்திலும் குறைவுபடாமல் அவர்கள் செய்யவேண்டியிருக்கிறது. பல இடங்களில் உபாத்தியாயர்கள் சங்கம் சரிவர நடப்பதில்லை. உபாத்தியாயர்களுக்கு புதிய விஷயங்கள் தெரியும் முறையில் இச்சங்கங்கள் நடத்தப்படவேண்டும். டெபுடி இன்ஸ்பெக்டரின் ஆபீஸ் உபாத்தியாயர்கள் புதிய விஷயங்களை அறியக் கூடிய காட்சிச் சாலையாய் இருக்கவேண்டும். இந்த சங்கங்களை கூட்டுபவர்கள் இதற்கு ஒரு திட்டம் வகுத்து இக்கூட்டங்களை நடத்த வேண்டும். கூட்டுறவு சங்கங்களைப் பற்றி உங்களுக்கு எடுத்துச் சொல்லப் பட்டது. அவர் கடைசியில் சொல்லியபடி கிராமத்திற் கென்று கூட்டுறவு சங்கங்களை ஆரம்பித்து அதில் கிடைக்கும் லாபத்தைக் கிராம முன்னேற்றத்திற்கு நீங்கள் உபயோகிக்கலாம் எனக் கூறி முடித்தார்.

கடைசியாக, ஸ்ரீ. பி. டி. ஜெகன்னாதன் அவர்கள், அனைவருக்கும் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது கலைந்தது.

ஷை தினம் காலை 10-30 மணிக்கு ஸ்ரீ. பி. டி. ஜெகன்னாதன் அவர்கள் தலைமையில், கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

ஆசிரியர்களின் சார்பாக அச்சிடப் பட்ட மெமோரியல் ஒன்றையும், ஜில்லா போர்டில் வேலை விஷயமாக ஆசிரியர்களின் மக்களுக்கு முதல் பிரதி நிதித்வம் அளித்தல், கோடை காலத்திற்காக கனம். டைரெக்டர் அவர்கள் உத்திரவுப்படி ஜூன், ஜூலை இரண்டு மாதங்களும் காலை மாத்திரம் பாடசாலை வைத்து நடத்த அனுமதி கோரல், தலைமை ஆசிரியர்களுக்கு அலவன்ஸ் கொடுக்கும் படி கேட்டல், இப்போது வழங்கப்படும் கண்டின்செண்டை நிறுத்தி, ஸ்டேஷனரி வகையராக்களை சப்ளை செய்யும் படிக்கும், ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் வகுப்பு புஸ்தகங்களை வழங்கும் படிக்கும், ஆசிரியர்களின் சார்பாக ஒரு கோஆபரேடிவ் சொஸைடி ஏற்படுத்திக் கொடுத்து, அதன் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் படிக்கும் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு அவர்களையும்.

ஆரம்ப ஆசிரியர்களின் மக்களுக்கு ஜில்லா போர்டு உயர்தர பாடசாலைகளில் இலவசக் கல்வி அளிக்க வேண்டுமென்றும், **G. O. No. M. S.** 416. **Dated** 24-2-39 உத்திரவை விரிவுபடுத்தி ஜில்லா யூனியன் ஏற்படுத்திக் கொள்ள அனுமதியளிக்கும் படிக்கும் ஜில்லா போர்டு பிரசிடெண்டு அவர்கள் மூலமாக அரசாங்கத்தார் அவர்களையும் கேட்டுக் கொள்ளத் தீர்மானிக்கப் பட்டது.

ஷை தினம் பகல் 12 மணிக்கு சைதாப்பேட்டை, செங்கற்பட்டு, மதுராந்தகம், காஞ்சீபுரம் தாலூக்காக்களின் ஆசிரியர்கள் தனித்தனிக் கூடி, போர்டு பாடசாலை ஆசிரியர்களின் தாலூக்கா யூனியன்களும், பைலாக்களும், அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக மேலதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சி. பாலசுப்ரமண்யம், காரியதரிசி.

# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

எஸ். ஆர். வெங்கடராமன், பி.ஏ., பி.எல்.,
(இந்திய ஊழியர் சங்கம், ராயப்பேட்டை, சென்னை.)

தமிழின் மறுமலர்ச்சிக்காக உழைத்து வரும் பல நண்பர்கள் தமிழ் எழுத்துக்களில் சில குறைகள் இருக்கின்றனவென்றும், தமிழ் மறு மலர்ச்சி இயக்கம் நன்ருக ஓங்கி வளரவேண்டுமானுல் தமிழ் எழுத்துக்களைத் திருத்தி அமைக்கவேண்டும் என்றும் பல நாட்களாக சொல்லி வருகிருர்கள்.

பாஷை என்பது மனிதனின் எண்ணங்களை வெளியிடுவதற்கு ஏற்பட்ட ஒரு வாகனம். சாதாரணமாக மனித வர்க்கத்தினர் ஒலிக்கும் எல்லா ஒலிகளையும் ஒலிக்கச் செய்ய ஒவ்வொரு பாஷையிலும் போதுமான எழுத்துக்கள் வேண்டும். தற்காலத்திலே பள்ளிக்கூடங்களில் 6-வது பாரம் (VI Form) வரை ஆங்கிலம் ஒழிந்த மற்றைய நூல்களான சரித்திரம், பூகோளம், ரஸாயன சாஸ்திரம் போன்றவைகளைத் தமிழிலேயே கற்பித்து வருகின்றனர். மேற்கூறிய நூல்களில் வரும் மக்களின் பெயர்களையும், ஊர்களின் பெயர்களையும், பொருள்களின் பெயர்களையும் ஒலி குன்ருமல் தமிழில் எழுதவும் படிக்கவும் முடியாமல் இருப்பதால் பல நகைப்புக்கு இடமான சம்பவங்கள் ஏற்படுகின்றன. அதாவது தமிழில் வேறு பாஷைகளில் உள்ள க, த, ட, ப என்ற எழுத்துக்களின் தீர்கங்கள் கிடையா. அம்மாதிரியே ஆங்கிலத்தில் உள்ள F and Z என்ற எழுத்துக்களின் ஒலியைக் குறிக்க தனி எழுத்துக்கள் கிடையா இந்தியாவிலுள்ள எல்லா பாஷைகளிலும் க, த, ட, ப என்ற எழுத்துக்களின் தீர்க்கங்கள் உண்டு. அவை தமிழில் இல்லை. தமிழ் மொழியில் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்தில் பாடங்களை கற்றுக்கொடுக்க இவ்வெழுத்துக்கள் (தீர்கங்கள்) மிகவும் அவசியம்.

இரண்டாவதாக தமிழ்மொழியில் தேவைக்கு அதிகமாக வேண்டாத சில எழுத்துக்கள் இருக்கின்றன. எழுத்துக்கள் தமிழிலும் மற்ற இந்திய பாஷைகளிலும் அதிகமாய் இருப்பதால்தான் அதிகமானபேர் எழுதப்படிக்க இயலாமலிருக்கிறது என்றெண்ண இடமுண்டாகிறது. மற்ற எல்லா இந்திய பாஷைகளை விட தமிழில் எழுத்துக்கள் குறைவென்ருலும் 313 எழுத்துக்கள் இருக்கின்றன. அதாவது :—

| | |
|---|---|
| உயிரெழுத்து .... .... .... | 12 |
| மெய்யெழுத்து தமிழ் .... .... .... | 18 |
| கிரந்த எழுத்துக்கள் ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ | 5 |
| தமிழ் உயிர் மெய்யெழுத்து (12 × 18) | 216 |
| ஆய்தம் .... .... .... .... | 1 |
| ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ உயிர்மெய்யெழுத்துக்கள் (5 × 12) | 60 |
| ஸ்ரீ .... .... .... .... | 1 |
| ஆகமொத்தம் எழுத்துக்கள். | 313 |

இந்த 313 எழுத்துக்களில் தமிழை கற்கும் ஒருவன் கீழ்கண்ட அடிப்படையான 88 எழுத்துக்களை எழுதக்கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது.—

| | | | | |
|---|---|---|---|---|
| உயிரெழுத்து | .... | .... | .... | 12 |
| ஆய்தம் .... | .... | .... | .... | 1 |
| மெய்யெழுத்து | .... | .... | .... | 18 |
| உயிர்க் குறிக் கோடுகள் ா, ெ, ே, ை, ி, ீ | | | .... | 6 |
| ணா, றா, னா .... | .... | .... | .... | 3 |
| ணை, லை, னை, ளை | .... | .... | .... | 4 |
| தமிழ் உயிர்மெய் உஹர உஹாரம் 18 × 2 | | | .... | 36 |
| ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ | .... | .... | .... | 5 |
| கிரந்த எழுத்துக்களோடு உபயோகிக்கும் உஹர ஊஹாரக் குறிகள் ு, ூ, | .... | .... | .... | 2 |
| ஸ்ரீ .... | .... | .... | .... | 1 |
| | | | ஆகமொத்தம் எழுத்துக்கள். | 88 |

இது சிறுவர்களுக்கும், முதியோர்களுக்கும் பல கஷ்டங்களை உண்டாக்குகிறது. இவற்றைக் கற்பதில் அவர்களுக்கு மன அலுப்பும், காலகரணமும் ஏற்படுகிறது. இக் காரணத்தைக்கொண்டு தமிழ்மொழியில் எழுத்துக்களைக் குறைக்கவேண்டியது அவசியம். அவ்வாறு மொழிக்கு ஒருவிதமான தீங்கும் ஏற்படாமல் செய்யலாம் என்பது எனது துணிவு.

மூன்றாவதாக தமிழிலே மெய் எழுத்துக்களுக்கு உயிர் எழுத்துக் குறிகளைச் சேர்த்து எழுதும்போது உயிர் எழுத்துக்களின் குறிகளில் சிலவற்றை மெய்யெழுத்திற்கு பின்னும் சிலவற்றை மெய்யெழுத்திற்கு முன்பும் நாம் போட்டு எழுதுகிறோம். (உ - ம்.) மெய்யெழுத்திற்குப் பின்னால் :—க் + ஆ = கா. (2) மெய்யெழுத்திற்கு முன்னால் க் + ஏ = கே. க் + ஓ = கோ. க் + ஔ = கௌ. சிறு குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும் எழுத்துக்களைக் கற்பிக்கும்போது பொதுவாக எல்லா மெய் எழுத்துக்களோடும் உயிர் ஒலிக்குறிகளை உபயோகிக்க ஒரு பொது விதியை ஏற்படுத்தினால் அதனால் எழுத்துக்களை அவர்கள் வெகு எளிதில் கற்றுக்கொள்ள முடியும். கற்கவேண்டிய எழுத்துக்களின் தொகையும் குறையும்; எளிதில், குறுகிய காலத்தில் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளலாம்.

ஆகவே தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை மூன்று பாகங்களாகப் பிரிக்கலாம். ஒன்று : தமிழில் புதிய ஒலிகளைக் குறிக்கச் சில எழுத்துக்களைச் சேர்ப்பது. இரண்டாவது : அதிகப்படியான வேண்டாத தமிழ் எழுத்துக்களைக் களைவது. மூன்றாவது : ஒலிக்குறிகளை மெய் எழுத்துக்களுடன் ஒரேவிதமாகச் சேர்த்தல். ஆகவே இத்தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை (1) (Grafting) ஒட்டுதல் ; (2) (pruning) கொப்புக் கழித்தல்; (3) (re-arranging) திருத்தி யமைத்தல் என்று மூன்று பாகமாகப் பிரிக்கலாம்.

முதலில் (pruning) கொப்புக்களை தல் என்பதை எடுத்துக் கொள்வோம். தமிழில் 12 உயிர் எழுத்துக்கள் உள. அவற்றில் 5 குறில், 7 நெடிலுமாகும். 7 நெடிலையும் நாம் களைந்துவிடலாம். உயிர்நெடில் களை; ஆவை : அா வென்றும், ஈயை : இா என்றும் ஊவை : உா என்றும் ஏ: எா என்றும் ஓ: ஓாவென்றும் எழுதலாம். நெட்டெழுத்துக்கு குறியான ா. ஒன்றைமாத்திரம் தெரிந்துகொண்டால் போதும். இதைக் கொண்டு ஐந்து உயிர் நெட்டெழுத்துக்களையும், 23 உயிர்மெய் ஆகார நெட்டெழுத்துக்களையும் மற்ற ஆகார நெட்டெழுத்துக்களையும் எழுதலாம். ணா, றா, னா, என்னும் எழுத்துக்களை ணா, றா, னா வென்றும் எழுதலாம். இந்த மூன்று எழுத்துக்களையும் தற்காலத்தில் தனியாக எழுதிக் கற்கவேண்டியிருக்கிறது. ஐயும் ஔவும் வேண்டியதில்லை. ஐயம் என்பதை அய்யம் என்றும் ஔவியம் என்பதை அவ்வியம் என்றும் எழுதலாம். அவ்விதமே கைலாயம் என்பதை கய்லாயம் என்றும் கௌரவம் என்பதை கவ்ரவம் அல்லது கவுரவம் என்றும் எழுதலாம். இதனால் கை, கௌ போன்ற எழுத்துக்கள் குறையும். இவ்விதமாகத் திரித்தியமைத்துக்கொள்வதில் ஒலிக் குறைவு ஒன்றும் ஏற்படாது. இலக்கணவிதிக்கு ஏதேனும் முரண்பாடாக இருந்தால், இலக்கண விதியைத் திருத்தி அமைத்துக்கொள்ளவேண்டும். இதனால் 7 உயிர் நெட்டெழுத்துக்கள் குறைவுபடுகின்றன. ஒருவன் கற்றுக்கொள்ளவேண்டிய உயிர் எழுத்துக்கள் 5-தான். மற்றும் ஐகாரம் ஔகாரம் சேர்ந்த 46 உயிர்மெய் எழுத்துக்களையும் சிறுவர்கள் கற்றுக்கொள்ளவேண்டியதில்லை. அதாவது 7 உயிர் எழுத்துக்களும் 46 உயிர்மெய் அதாவது 23 ஐகார உயிர்மெய் எழுத்துக்களும், 23 ஔகார உயிர்மெய் எழுத்துக்களும் மொத்தம் 52 எழுத்துக்கள் குறைகின்றன. இச் சீர்திருத்தத்தால் அந்த சிரமமும் நீங்கும்.

சில உயிர்மெய் எழுத்துக்களை தாம் தனியாக எழுதவேண்டியிருக்கிறது. இது வேண்டாததொல்லை. ஐ, ஔ அகரத் தவிர 9 உயிரெழுத்துக்களின் ஒலியைக் குறிக்க 9 தனிக் குறிகளை நாம் ஏற்படுத்திக் கொண்டால் நாம் கற்கவேண்டிய எழுத்துக்களின் தொகை குறையும். அக் குறிகளையெல்லாம் நாம் இப்போதுள்ள தமிழ் குறிகளிலிருந்தே எடுக்கலாம். க் + ஆ = கா என்பதை எல்லா எழுத்துக்களுக்கும் ண, ற, ன உள்பட உபயோகிக்கலாம் என்று மேலே காட்டினேன். க் + இ = கி என்று எழுதுவதை க வேறு அதற்கடுத்து வலது பக்கத்தில் ி போன்ற குறியைப் போடலாம். அவ்விதமே ஈ = ீ, உ = ு, ஊ = ூ, எ = ெ, ஏ = ே என்றும் போடலாம். மேற்கண்ட குறிகளெல்லாம் தமிழில் ஏற்கனவே உள.

இதனால் ஒருவிதமான கஷ்டமும் ஏற்படாது. தமிழில், வழக்கத்தில் ஏற்கனவே உள்ள கிரந்த எழுத்துக்களான ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்ற எழுத்துக்களுக்கு உஹர ஊஹாரக் குறிகளைச் சேர்த்து ஜு, ஜூ போன்று எழுதுகிறோம். இக்குறிகளை நாம் ஏற்றுக்கொண்டால்

45 எழுத்துக்களைத் தனியாக எழுதிக் கற்கவேண்டிய அவசியமேற்படாது. க் + ஒ = கொ, க் + ஓ = கோ, போன்ற உயிர்மெய் எழுத்துக்களை நாம் மூன்றெழுத்துக் கொண்டு எழுதுகிறோம். இவற்றை இரண்டு எழுத்தைக்கொண்டே எழுதலாம் என்பது எனது துணிவு:

[உதாரணம்:— க் + ஒ = ெ க, க் + ஓ = ே க இவைதான் (pruning) கொப்புக்களைதல் என்ற சீர்திருத்தம்.]

இரண்டாவதாக rearranging vowel symbols உயிர்க்குறிகளைத் திருத்தியமைத்தல் என்பதை எடுத்துக்கொள்வோம். தமிழில் க் + ஆ = கா வென்றும் க் + எ = கெ என்றும் உயிர் எழுத்து ஒலியை மெய்யெழுத்திற்கு முன்னும் பின்னுமாகப் போடுகிறோம். இப்படி எழுதும் எழுத்தை உயிர் மெய் எழுத்தென்கிறோம். அதைப் பொறுத்தமட்டில் க் + எ = கெ என்று எழுதுவதில் உயிரெழுத்தான எயின் ஒலிக்குறி எழுத்தின் முதலில் வருகிறது. ஆயின் க் + ஆ = கா என்ற எழுத்தில் மெய்யெழுத்தான க முதலில் வருவதாலும், உயிரெழுத்தான ஆ பின் வருவதாலும், ஆகார ஒலிக் குறியான ா மெய்யெழுத்தின் பின்னும் வருகிறது. குழந்தைகளும் முதியோர்களும் எளிதில் அறியும்பொருட்டு இக்குறிகளை எல்லாம் மெய் யெழுத்திற்குப் பின்னல் போடுவது நலம் என்று தோன்றுகிறது.

மூன்றாவதாக தமிழ்மொழியில் இல்லாத சில புதிய ஒலிகளை உண்டாக்க எழுத்துக்கள் சேர்க்கவேண்டியதைப்பற்றி (Grafting) கவனிப்போம். அதாவது மற்றைய இந்திய பாஷைகளிலுள்ள, Ga (ग) dha (द) Ba (ब) da (ड) என்ற தீர்க்கங்களும், ஆங்கிலத்திலுள்ள F-ம் Z-ம் தமிழில் கிடையா. இவை தற்காலத்தில் மிகவும் அவசியம். பள்ளிக்கூட மாணவர்கள், (Bosporus) பாஸ் பரஸ் ஜலஸந்தியை (posporus) பாஸ் பரஸ் என்றும் (Tory) டோரி என்ற ஆங்கில அரசியல் கக்ஷியை (Dory) என்றும், (Ripon) பிரபுவை ரிப்பன் (Ribbon) என்றும் சொல்ல நேரிடுகிறது. இதில் நகைச் சுவை இருக்கிறதென்றாலும் கல்வியின் நோக்கத்திற்கு ஏற்றதாயில்லை. ஆகவே இவற்றிற்கேற்ற எழுத்துக்களை தமிழில் அமைத்துக்கொள்ளவேண்டும். அப்படி நாம் அமைக்கும் புதிய எழுத்துக்கள் ஏறக்குறைய இப்போது தமிழில் அந்தந்த ஒலிவர்க்கத்தைச் சேர்ந்த எழுதுக்களையேதான் அடுத்திருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் பாமர ஜனங்களும் உபாத்தியாயர்களும் மாணவர்களும் மதிக்கலக்கமின்றி புதிய எழுத்துக்களைக் கற்று அறிந்துகொள்ளமுடியும். இப் புதிய எழுத்துக்களைப் பின்னல் தனியாக எழுதியிருக்கிறேன்.

இச் சீர்திருத்தத்தால் ஏற்படும் நன்மை என்ன? மேலே, தமிழ் கற்கவேண்டுமென்ற ஒருவர் 88 எழுத்துக்களைக் கற்கவேண்டுமென்று எடுத்துக்காட்டினேன். புதிய சீர்திருத்தப்படி கற்கவேண்டிய எழுத்துக்கள் நாற்பத்தி நான்கு (44)தான் அதாவது,

| | |
|---|---|
| உயிரெழுத்துக் குறில் .... .... .... | 5 |
| மெய்யெழுத்துக்களோடு சேர்க்கும் உயிர்க் குறிகள் | 9 |
| மெய்கள் .... .... .... .... | 18 |
| ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ, ஸ்ரீ | 6 |
| புதிதாய் சேர்க்கும் எழுத்துக்கள் | 6 |
| | 44 |

சீர்திருந்திய திட்டத்தில் ஒருவன் 44 எழுத்துக்களைக் கற்றுக் கொண்டால் போதுமானது. மேலும் இந்த 44 எழுத்துக்களில் நாம் 6 புதிய எழுத்துக்களையும் சேர்த்திருக்கிறோம்.

இந்தப் புதிய ஏற்பாட்டைத் தமிழ் அன்பர்கள் நன்று ஆலோசிக்க வேண்டும். தமிழில் இச் சீர்திருத்தங்கள் ஏற்பட்டால் தமிழ்மொழி பல துறைகளிலும் முன்னேற்றமடையும்.

## எழுத்துக்களைச் சீர்திருத்தும் வகை :—


பழையது

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

புதிது

அ அா இ இா உ உா எ எா — ஒ ஒா —

உயிர்க் குறிகள்




மெய்

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

கிரந்த எழுத்துக்கள்

ஜ ஷ ஸ ஹ க்ஷ ஸ்ரீ

புதிய எழுத்துக்கள்



# செய்தித்திரட்டு

## (1) திருச்செந்தூர் தாலூக்கா உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் யூனியன், குலசேகரன்பட்டினம்

இந்த யூனியனின் நான்காவது கூட்டம் 1941ஆம் ஏப்ரல்மீ 5உ ஸ்ரீ. S. V. ரத்னராஜ் தலைமையில் கூடிற்று. தாலூக்காவின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 70 ஆசிரியர்கள் ஆஜராயிருந்தனர். அறிக்கை வரவு செலவுக் கணக்கு வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளலாயிற்று.

குலசேகரன்பட்டினம் ஆசிரியர் ஸ்ரீ. J. ராமசுவாமி ஐயர் அவர்கள் "ஆசிரியர்களின் குறைபாடுகளும் அவற்றை நீக்கச் சில வழிகளும்" என்பது பற்றிப் பேசுகையில் நமது குறைகளை நீக்கிக்கொள்ள, இவ்வித யூனியன்களைப் பலப்படுத்தி ஊக்கத்துடன் ஒத்துழைப்பதே என்றும் கூறினர்கள். சாத்தான்குளம் ஆசிரியர் ஸ்ரீ. காசிவிசுவநாதன் "ஆசிரியர்களின் ஐக்கியம்" என்பதுபற்றிப் பேசினர்கள். பிறகு சில தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறின.

---

## (2) ஸ்ரீ பாலஸரஸ்வதி கல்லூரி பெற்றோர் சங்கம், கருந்தட்டாங்குடி, தஞ்சாவூர்.

30—3—41-ல் இக்கல்லூரியின் பெற்றோர் சங்க மாதாந்திரக் கூட்டம் ஒன்று சங்கத்தின் உபதலைவர் ஸ்ரீ V. S. அய்யங்கார் தலைமையில் கல்லூரிக் கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பெரும்பாலான பெற்றோர்கள் வந்திருந்தனர்.

கல்லூரி மாணவ, மாணவிகளால் கோலாட்டம், இன்னிசை, சொல்லாடல், சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகள் வெகு நேர்த்தியாக நடத்தப்பட்டபின் சங்கத்தின் விதிகள் நிறைவேற்றப்பட்டன.

தலைவர் தம் முடிவுரையில் கல்லூரியின் திறம்பட்ட வேலை முறையையும், அன்று நடைபெற்ற மாணவ மாணவிகளின் நிகழ்ச்சிகளையும் பெரிதும் பாராட்டிப் பேசினர்.

---

## (3) கேமத்தான்பட்டியில் ஆண்டுவிழா

இவ்வூர் திருநாவுக்கரசு வித்தியாசாலையில் 15-வது ஆண்டு விழாவும் விசாலாட்சி சங்கத்தில் 5-வது ஆண்டுவிழாவும் 22—4—41 செவ்வாய்க்கிழமை காலை மாலை இரு வேளைகளிலும் அண்ணாமலை பல்

கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியர் உயர் திரு. பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

காலையில் மாணவ மாணவிகளின் உணர்ச்சி ததும்பிய நடிப்புக்களும், இன்னிசைக் கீதங்களும் மாலையில் "அப்பர் காட்டிய நன்னெறி" எனும் பொருள்பற்றி தலைவரவர்களும் "தென்னாடும் தேவாரமும்" என்னும் பொருள்பற்றி உயர்திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். குழந்தைகள் நடித்த காட்சிகளில் திரு வள்ளுவர் நாடகம், தியாகம், ஊடல், விதியும் மதியும், திருமறைப் பெருவேந்தர், முதலியவைகள் போற்றத்தக்கதா யிருந்தன. பின் தலைவரவர்களுடைய நீண்ட முடிவுரையுடன் நன்றிகூற, நாட்டு வணக்கம் பாடப்பெற்று விழா 8-30 மணிக்கு இனிது நிறைவெய்தியது. ஆண் பெண் மக்கள் சுமார் 2000-ம் பேர்கள்வரை குழுமியிருந்தார்கள். அனைவருக்கும் சிறந்த முறையில் உணவு அளிக்கப்பெற்றது.

ஒரு நிருபர்.

---

## (4) திருச்செங்கோடு

20—4—1941 மாலை 2 மணி முதல் 5 மணி வரை திருச்செங் கோடு தாலூகா போர்டு ஆரம்ப ஆசிரியர் யூனியன் தலைவர் ஸ்ரீ S. செல் லப்ப கவுண்டர் தலைமையில் சங்ககிரி ஆண் பாடசாலையில் நிர்வாகக் கமிட்டியின் கூட்டம் நடந்தது சுமார் 25 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

---

## (5) திருப்பத்தூர், மடவாளம்.—ஒரு பொதுக்கூட்டம்

வட ஆற்காடு ஜில்லா திருப்பத்தூர் தாலூகா மடவாளம் போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை மாணவர் தமிழ் சங்கக் கூட்டமொன்று 25-4-41ல் ஸ்ரீ. N. திவாகரராவ் M.A.,L.T., டெபுடி இன்ஸ்பெக்டர் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அப்போது காரியதரிசி முதலானவர்கள் "கிராமக் கைத்தொழி லும் தொழிலாளரும்' என்பதைபற்றி சொற்பொழிவாற்றினதும் சகோதர சகோதரிகளால் ஒரு ஆங்கில கதையும் கும்மி கோலாட்டமும் நடத்திக் காண்பிக்கப்பட்டன. அதன் பிறகு தலைவர் தமது முடிவுரையை விளக்கமாக பேசி முடித்தார்.

---

## (6) ஸ்ரீ இராமகிருஷ்ண ஆரம்பப் பாடசாலை, சிவகெங்கை

மூன்றாவது பெற்றோர் தினக்கொண்டாட்டமும் வருஷ விழாவும் 20-4-41 மாலை 6 மணிக்கு சிவகெங்கை ரேஞ்சு சீனியர் டிப்டி இன்ஸ் பெக்டர் ஸ்ரீ. V. கிருஷ்ணய்யங்கார் அவர்கள் தலைமையில் மேற்படி

பள்ளிக்கூடத்தில் நடைபெற்றது. அவ்வமயம், ராஜாஸ் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ. வீ. குப்புசாமி அய்யர் அவர்களால் "வீடும் குழந்தையின் கல்வியும்" என்பதைப்பற்றி விரிவான சொற்பொழிவு நிகழ்த்தப் பட்டது. மேலும்பழைய மாணவரான ஸ்ரீ. G. அனந்தநாராயணனால் உடற்பயிற்சி, யோக ஆசனங்கள் முதலியன செய்து காண்பிக்கப்பட்டது. மேற்படி ஸ்கூல் மாணவ, மாணவிகள் பாரதி, சுத்தாநந்த பாரதி, விவேகானந்தர் இவர்களின் முக்கியமான வாசகங்களை பேச்சுப்போட்டியில் பேசினார்கள். மாணவிகள் இசைப்போட்டி, நடனம் முதலியவைகள் நிகழ்த்தினார்கள். முடிவில் தலைவர் மேற்படி போட்டிகளில் கலந்து வெற்றி பெற்றவர்களுக்கும், விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரீக்ஷையில் முதன்மையாய் தேறியவர்களுக்கும் சரியாய் பள்ளிக்கூடத்திற்கு ஆஜரானவர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

---

## (7) பெற்றோர்கள் சங்கம், கூமாபட்டி திருமங்கலம் தாலூகா

19—4—41 தேதியன்று மாலை மேற்படி சங்கத்தின் சாதாரணக் கூட்டம் போர்டு உயர்தர ஆரம்பப் பாடசாலைக் கட்டிடத்தில் நடைபெற்றது. மதுரை ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ. எஸ். முத்துக்கருப்பத் தேவர் தலைமை வகித்தார். தலைமையாசிரியர் ஸ்ரீ. ஆர். லக்ஷ்மி நாராயணன், ஆசிரியர் ஜே. டி செல்லையாத் தேவர், இவர்களால், முறையே, "மாணவரின் இயல்பும் கடமையும்", "கிராம முன்னேற்றம்" என்னும் விஷயங்கள் உபன்னியசிக்கப்பட்டன. போர்டு பெண்பாடசாலை மாணவிகளால், கோலாட்டம், கும்மி, நடத்தப்பெற்றன. தலைவர் கூறிய தன் சுருக்கம் பின்வருமாறு :—

கிராமங்களில் கல்வியறிவு குறைந்திருப்பதன் காரணம் பெற்றோர்களின் அறியாமையே யாதலின், பெற்றோரைக் கற்கும்படி செய்து, கல்வியின் பயனை அவர்கள் அனுபவிக்கவும், அதன்மூலம் தமது குழந்தைகளையும் பயிற்றுவித்தல் அவசியமென அவர்களை உணரும்படி செய்யவும் முதியோர் கல்வித்திட்டம் மிக அவசிய மென்று கூறுவது மிகையாகாது. ஆசிரியர் இளைஞரின் கல்வியில் ஊக்கத்துடன், எவ்வித இடையூறுகள் எற்படினும், செவ்வனே இயற்ற வேண்டும்; ஆசிரியத் தொழில் மிகவும் புனிதமானது; ஆசிரியர் முயற்சியில் பெற்றோர்கள் ஒத்தாசையாயிருந்தால்தான் சமூகம் கல்வியில் மேம்படும். கைத்தொழில்களின் மூலமே இந்தியா பொருளாதாரத்துறையில் உயர்வையடையும்; பாடசாலைகளில் சங்கியைக்குத் தக்கபடி இடவசதி யளித்தல் அவசியம். மாணவர்கள் தமது கடமையை உணர்ந்து, அதற்குத்தக நடந்து கொள்ளவேண்டும். கிராமங்களில் சுகாதார விஷயங்களைக் கவனித்து நடந்தால் கூடியவரை கொள்ளை நோய்களைத் தடுக்கலாம்."

இறுதியில் வந்தனோபசாரம் கூறப்பட்டபின் வாழ்த்துப் பாடல்களுடன் கூட்டம் இனிது கலைந்தது.

## (8) செஞ்சி தாலூகா போர்டு பஞ்சாயத் ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன்

27—4—41 மாலை செஞ்சி தாலூகா போர்டு பஞ்சாயத் ஆரம்பாசிரியர்களின் யூனியன் பொது சபைகூட்டம் செஞ்சி ஆண் பாடசாலையில் ஸ்ரீ நாராயண ரெட்டியார் யூனியன் பிரசிடெண்ட் அவர்களின் தலைமையிற் கூடியது சுமார் நாற்பது அங்கத்தினர்கள் ஆஜரானார்கள். உலக யுத்தத்தில் நமது அரசருக்கு ஜெயம் கிடைக்கும்படி பிரார்த்தனை செய்து உலகெங்கும் யுத்தநிலை காரணமாக வாழ்க்கைதிட்டம் மோசமாகிவருவதால் இதர இலாகாவில் யுத்த அலெவன்ஸ் கொடுக்க, ஜில்லா போர்டில் ஆரம்பாசிரியர்கள் சம்பளத்தில் ஒரு ரூபாய்க்கு ஒரு அணா பிடித்தம் செய்ய யோசிப்பது அக்ரமமென்றும் ரத்து செய்யும்படிக்கும் தீர்மானிக்கப்பட்டது. இது விஷயமாய் யூனியனிலிருந்து மூவர் தூது செல்வதென்றும், தீர்மானிக்கப்பட்டது.

---

## (9) ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களின் யூனியன் ஆண்டு விழா, இராசீபுரம் (சேலம்)

19—4—41 இராசீபுரம் தாலூக்கா ஜில்லா போர்டு பஞ்சாயத்து ஆரம்ப ஆசிரியர்களின் முதல் ஆண்டு விழா பொதுக்கூட்டம் இராசீபுரம் போர்டு எலிமெண்டரி ஆண் பாடசாலை கட்டிடத்தில் யூனியன் தலைவர் ஸ்ரீமான் கே. எ. ரங்கசாமி அவர்களின் தலைமையின் கீழ் கூடிற்று. தலைவர் யூனியன் பொறுப்பு ஆசிரியர்களின் கடமை என்பதைபபற்றி சிறு உபன்னியாசம் நிகழ்த்தினர். தேநீர் விருந்து நடந்தேரியது. வரப்போகும் வருஷத்திய தேர்தல் நடைப்பெற்றது. பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

---

## (10) மதுரை ஜில்லா, பெரியகுளம் தாலூகா

வெங்கடாசலபுரம் செண்டர், உபாத்திமைச்சங்க ஆண்டுவிழா. 29-4-41ந் தேதி பிற்பகல் 2½ மணிக்கு திண்டுக்கல் ஜில்லா ஹரிஜன் சங்கக் காரியதரிசி கோகிலாபுரம் ஸ்ரீஜத். C. அன்னகாமு B. A. அவர்கள் சீரிய தலைமையின்கீழ் சிறப்பாய் நடைபெற்றது.

அவ்வமயம் உசிலம்பட்டி போர்டு ஹைஸ்கூல் தமிழ்பண்டிட் வித்வான் ஸ்ரீ. V. சிவக்கொழுந்து அவர்கள் 'ஆரம்ப ஆசிரியரும் தாய் மொழியும்' என்பது பற்றியும், உத்தமபாளையம் போர்டு ஹைஸ்கூல் ஹிந்தி பண்டிட் ஸ்ரீ. S. ஸ்ரீனிவாஸன் அவர்கள் 'கிராம நிலையும் ஆசிரியர் கடமையும்' என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். வந்தனோபசாரத்துடன் சுமார் 5 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

# Refresher Course in Geography for Elementary School Teachers

உயர்தர பாடசாலைகளுக்காக பூகோள சம்பந்தமான பாட திட்டங்கள் புது முறையில் பிரசுரிக்கப்பட்டு சில வருஷங்களாக வழங்கி வருகிறது. ஆனால் ஆரம்ப பாடசாலைகளுக்காக இப்பொழுது வெளியாக்கப்பட்ட பூகோள பாடதிட்டம் தான் முதன் முதலாக புது முறையைத் தழுவி தயாரிக்கப் பட்டுள்ளது. இதன் நோக்கமும் முறைகளும் பொருளடக்கமும் நன்கு விளங்க வில்லையென்று பல ஆசிரியர்கள் கேட்டுக் கொண்ட தன்மேல் சென்னை பூகோள சங்கம் சென்னை ஆசிரிய சங்கத்துடன் ஏகோபித்து கோடைக் கல்விச் சாலைகளை நடத்த நிச்சயித்திருக்கிறது. ஒரே காலத்தில் நூறு பேருக்கு மேல் பயிற்சி வேலை உள்பட பாடங்களை நடத்துவது கடினமாகையால் முதன் முதலாக நூறு ஆசிரியர்களுக்கு மாத்திரமே இக்கல்விச்சாலை நடைபெறும். பிறகு தேவையிருந்தால் மறுபடியும் வேறிடங்களில் நடத்தப்படும்.

முதல் கல்விச்சாலை ஜூன் 2ம் தேதி முதல் 7ம் தேதி வரையில் அந்த வாரம் முழுவதும் நடக்கும். பிரதி தினமும் காலை வகுப்பில் எல்லா ஆசிரியர்களுக்கும் மாலை வகுப்பில் உயர்தர ஆரம்பாசிரியர்களுக்கு மாத்திரம் 6, 7, 8, வகுப்புகளுக்கு போதிக்கும் முறையைப் பற்றி நடக்கும்.

இக்கல்விச்சாலை நடக்கும் இடம், நேரம் முதலிய விவரங்களைப் பற்றிப் பின்னர் பிரசுரிக்கப்படும். காலை வகுப்புக்கு கட்டணம் ரூ 1. மாலை வகுப்புக்கு ரூ 1. கல்விச் சாலை சேர விரும்புவோர் அடியிற் கண்ட விலாஸத்துக்கு மே 26ம் தேதிக்குள்ளாக தெரியப் படுத்தவேண்டும். கட்டணத்தை அந்த தேதி முதல் 30ம் தேதிக்குள்ளாக அதே விலாஸத்துக்கு அனுப்ப வேண்டியது.

சென்னை பூகோள சங்கம்
கோபாலபுரம், கதிட்ரல்
போஸ்டு, சென்னை

N. சுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

# ஸ்தலஸ்தாபனங்களின் கல்விவரி

## 1920-ம் வருஷத்திய ஆரம்பக்கல்விச்சட்டத்திற்குத் திருத்த மசோதா, 1941

தென்னிந்திய ஆசிரியச்சங்கத்தும், சென்னை ஆசிரியக்கழகத்தும் கூட்டு ஆதரவில் ஆரம்பக்கல்விச்சட்டத் திருத்தமசோதாவைப் பற்றி ஆலோசிக்க **Sir P. S. Sivaswami Iyer, K. C. S. I., C. I. E.,** அவர்களின் தலைமையில் மைலாப்பூர் ரானடே ஹாலில் 28-4-'41 அன்று மாலை ஒரு பொதுஜனக்கூட்டம் நடந்தது.

**அக்ராசனர் கூறினதாவது:—**

1920-ம் வருஷச் சட்டத்தின்படி ஸ்தலஸ்தாபனங்கள் கல்விவரி வசூலிக்கலாம். மாகாண சர்க்கார் வசூலிக்கப்பட்ட அந்த வரித் தொகைக்கு சமமான தொகையைக் கொடுக்கக் கட்டுப்பட்டிருக்கிறார்கள். இத்திருத்தமசோதாவினால் சர்க்கார் சமமான தொகையைக் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனை நீங்கிவிடும். இப்பொழுது அநேக ஜில்லா போர்டுகளும் முனிசிபாலிடிகளும் கல்விவரி விதிக்காமலிருக்கிறது. அவைகளுக்கு இனிமேல் சர்க்கார் உதவி அளிக்கப்பட மாட்டாது. சட்ட பூர்வமான உத்தரவாதம் இல்லாவிட்டால் இம்மாகாணத்தில் ஆரம்பக்கல்வியின் அபிவிருத்திக்குத் தடங்கல் ஏற்படும். சர்க்கார் உதவி இல்லாவிட்டால் அவர்கள் விரும்பும் அளவு ஆரம்பக்கல்வியை அபிவிருத்தி செய்யமுடியாது. ஸ்தலஸ்தாபனங்கள் தங்கள் வருமானங்களிலிருந்து கல்வி சம்பந்தமான முழுச்செலவுக்கும் ஏற்பாடு செய்ய முடியாது. சர்க்கார் இப்பொழுது கொண்டுவரப்போகும் திருத்தச் சட்டத்தை நிறுத்திக்கொள்வதுதான் நியாயம்.

**மிஸ்டர் T. T. கிருஷ்ணமாச்சாரியார், சட்டசபை மெம்பர், சொன்னதாவது:**

இந்த மசோதாவை இப்பொழுது கொண்டுவரவேண்டிய அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. 1927-ம் வருஷத்திலிருந்து முனிசிபாலிடிகளிலிருந்துவந்த வரிவிதிக்கவேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு சர்க்கார் இணங்கவில்லை. அவைகளுக்கு தங்கள் வேண்டுகோள்களைத் தள்ளி விடுவதில் சர்க்காரின் அபிப்பிராயம் இன்னதென்பது தெரியாமல் இருந்தது. வரவு செலவு திட்டத்தைப் பொறுத்து இந்தமசோதாவைக் கொண்டுவருவதாக தற்போதைய சர்க்கார் சொல்லமுடியாது. கவர்ன்மெண்டிற்கு சுமார் ஒருகோடி ரூபாய் செலவுக்கு மிஞ்சி இருக்கிறது. இவ்வளவு காலமாய் கல்விவரி விதிக்காத முனிசிபாலிடிகள் அவ்வரியை விதித்தாலும்கூட சர்க்காரால் கொடுக்கப்படவேண்டிய தொகை சுமார் எட்டு லக்ஷம் ரூபாய் அதிகமாகும். இத்திருத்த மசோதாவின் கொள்கை 1920-ம் வருஷத்திய சட்டத்திற்கு நேர் எதிராயிருக்கிறது. 1920-ம் வருஷ சட்டத்தைக் கொண்டுவருங்காலத்தில் மிஸ்டர் **A. R. Knapp** என்பவர் முழுபாரத்தையும் ஸ்தலஸ்தாபனங்கள் பேரிலும், பொதுஜனங்கள்பேரிலும் சுமத்த சர்க்காருக்கு எண்ணமில்லை என்று தெளிவாகச் சொல்லி இருக்கிறார். சட்டத்தைத் திருத்துவதைவிட சர்க்கார் கல்வி நிர்வாகத்தைச் சீர்திருத்தலாம். சமூகத் தொண்டில் ஈடுபட்ட ஒரு பிரத்தியேகமான உத்தியோகஸ்தரிடம் ஆரம்பக்கல்வியின் நிர்வாகப்

பொறுப்பை ஒப்படைக்கலாம். மாகாணத்தில் ஆரம்பக்கல்வியை மேலான நிலைமைக்குக் கொண்டுவர நினைத்து மாகாணக் கல்வி அதிகாரி சில முறைகளைக்கையாண்டு வருகிறார்கள். அதன் காரணமாக சுமார் 5000 பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. இந்தத் திருத்தச் சட்டம் ஆரம்பக்கல்விக்கு இன்னும் அதிக இடையூறாக இருக்கும். ஆகையால் சர்க்கார் எல்லாவற்றையும் இப்பொழுது இருக்கிறபடி விட்டுவிடுவதே நலம்.

பிறகு, மிஸ்டர் M. S. சபேசய்யர் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொண்டு வந்தார்:—

"இனிமேல் கல்விவரி விதிக்கத் தீர்மானிக்கும் ஸ்தலஸ் தாபனங்களுக்கு மொத்தவரி வசூலுக்குக் குறையாமல் சட்டபூர்வமான உத்தரவாதமுள்ள உதவியை நிவர்த்திப்பதனால் இந்தத் திருத்த மசோதாவானது இம்மாகாணத்தில் ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியைக் கட்டாயம் தடை செய்யக்கூடும் என்று இந்தக்கூட்டம் அபிப்பிராயப் படுகிறது."

"சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் உதவித்தொகை நிச்சயமில்லாமலிருப்பதால் ஸ்தலஸ்தாபனங்கள் கல்விவரி விதிக்க மனமில்லாமலிருக்கும். மேலும் அந்த வரியின் மொத்தம் ஆரம்பக்கல்வியின் அபிவிருத்தியை நடத்துவதற்குப் போதுமானதாகவும் இராது."

"இந்தத் திருத்த மசோதாவை இந்தக் கூட்டம் கண்டிப்பாக ஒப்புக்கொள்ளாததோடு இதை நிறுத்திவிடும்படி சர்க்காரை வேண்டிக் கொள்ளுகிறது."

மிஸ்டர் சபேசய்யர் சொன்னதாவது:—எல்லா வழிகளிலும் கல்வி சம்பந்தமான செலவைக் குறைக்கவேண்டுமென்கிற சர்க்கார் கொள்கையின்படி இந்தத் திருத்த மசோதா கொண்டுவரப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது. சர்க்கார் கொஞ்சம் பண உதவிபுரியலாம் என்ற நம்பிக்கையைக்கொண்டு ஸ்தலஸ்தாபனங்கள் ஆரம்பக்கல்வியின் பொறுப்பை வகிக்கமுடியாது. இந்நிலையில் பொறுப்பை வகிக்கச்செய்வதும் சரியல்ல. தராதரங்கள் ஏற்படும். அதனால் மிகுந்த கெடுதல்கள் உண்டாகும். இந்தத் திருத்த மசோதாவைக்கொண்டு வரத்தகுந்த காரணங்களும் இல்லை. இத்திருத்தமும் அனுவசியம்.

திவான்பகதூர் மிஸ்டர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரிகள் மேல்கண்ட தீர்மானத்தை ஆமோதித்துச் சொன்னதாவது:—

இத்திருத்த மசோதா ஆரம்பக்கல்வியின் வளர்ச்சிக்குத் தடங்கலாகும். இது கல்வியின் விஸ்தீரணத்தை அதிகப்படுத்தவும்போகிறதில்லை. பள்ளிக்கூடங்களின் ஊக்கத்தையும் விருத்திசெய்யப்போவதில்லை.

அக்ராசனர் தீர்மானத்தை வோட்டுக்கு விடுவதற்குமுன், பணக்கஷ்டத்தினால் இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டால் சர்க்கார் பண உதவி செய்வதைக் கொஞ்சகாலம் நிறுத்திவைத்துக்கொள்ளலாம். உதவி அளிக்கும் சட்டத்தை ரத்துசெய்யவேண்டாம் என்றுசொன்னார்.

மேல்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மிஸ்டர் T. P. ஸ்ரீனிவாஸவரதன் தலைவருக்கும், பேசினவர்களுக்கும், வந்தனோபசாரம் கூறினார்.

குறிப்பு:—மேல்கண்ட தீர்மானத்தை தென்னிந்திய ஆசிரியச் சங்கக் காரியதரிசி சர்க்காருக்கும் அதிகாரிகளுக்கும் அனுப்பி இருக்கிறார்.

# பத்திராதிபர் குறிப்புகள்

## என் முடியாது?

சாதாரணமாக ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நல்ல நிலைமையில் உழைத்து வருவதைக் காண்பது அரிது. பிள்ளைகள் சேரவில்லை என்பதும் சேர்ந்த பிள்ளைகள் ஒழுங்காக வருவதில்லை என்பதும் பெற்றோர்கள் குழந்தைகளின் படிப்பில் சிரத்தைகாட்டுவதில்லை என்பதும் ஆங்காங்கு பள்ளிக்கூடங்களில் கேட்கிறோம். பல காரணங்களால் உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் சர்க்காரிடமிருந்து கிடைக்கக்கூடிய உதவியை அடைவதில்லை. ஸ்தலஸ்தாபனப் பள்ளிக்கூடங்களிலும் மேலே கூறிய குறைகள் இருப்பது எல்லோருக்கும் தெரியும். இந்நிலையில் ஒழுங்கான முறையில் உற்சாகத்துடன் சில ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் நடத்தப் படின் அவைகளை நாம் பாராட்டுவது அவசியம். சமீபத்தில் தென்னிந்திய ஆசிரிய சங்கத் தலைவருக்கு பழைய மாம்பலம் சாரதா பாடசாலையிலிருந்தும் விழுப்புரம் ஹிந்து எலிமெண்டரி பாடசாலையிலிருந்தும் அவர்களுடைய வருஷாந்திரக் கொண்டாட்டத்திற்கு தலைமை வகிக்கும் படி கடிதங்கள் கிடைத்தன. இந்த இரண்டு பள்ளிக்கூடங்களும் ஐந்து வகுப்புகளடங்கிய ஆரம்பப் பாடசாலைகள். ஒவ்வொரு வகுப்பிலும் பிள்ளைகளுக்குக் குறைவில்லை. அனேகம் பிள்ளைகள் ஒழுங்காக நாள் தோறும் ஆஜராயிருப்பதை பள்ளிக்கூட ரிகார்டுகளில் காணலாம். புதிய பாட திட்டத்தின்படி ஒழுங்காகவும் யோசனையுடனும் பாடங்களை நடத்திவருவதற்கு அத்தாட்சிகள் பார்க்கிறோம். குழந்தைகளின் தேகப் பயிற்சியையும் விசால நோக்கத்தையும் இப்பள்ளிக்கூடங்கள் மறக்கவில்லை. குழந்தைகளின் பேச்சும் ஆடலும் பாட்டும் இவைகள் உயர்தர பள்ளிக்கூட வகுப்புக்களைச் சேர்ந்தவர்களோவென்று நாம் நினைக்க வேண்டியிருக்கும். பெண்பிள்ளைகளும் ஆண்பிள்ளைகளுடன் வகுப்பில் படிக்கின்றனர். இப்பள்ளிக்கூட ஆசிரியர்களும் பள்ளிக்கூடத்தை எவ்வழியில் மேம்படுத்தமுடியும் என்பதையே யோசித்துக்கொண்டிருப்பதை அவர்கள் பேச்சிலிருந்து நாம் காணலாம். மாம்பலத்துப் பள்ளிக்கூட சம்பந்தமான ஒரு தனி விசேஷத்தை நாம் குறிப்பிட விரும்புகிறோம். இப்பள்ளிக்கூடம் இரண்டு, மூன்று ஆசிரியர்கள் சேர்ந்து நடத்தப்பட்டுவருகிறது. வரவும் செலவும் ஆசிரியர்களுக்குத் தெரிந்த விஷயம். ஆசிரியர்கள் கூடி ஒற்றுமையுடன் ஒரே மனதாய் வேலைசெய்வதால் மாம்பலத்திலுள்ள பெற்றோர்களும் பொதுஜனங்களும் அசட்டையாயிராது குழந்தையின் படிப்பில் சிரத்தையைக் காட்டுகின்றனர். விழுப்புரத்துப் பள்ளிக்கூடம் ஹெட்மாஸ்டரின் தனி நிர்வாகத்தில் நடந்தபோதிலும் அங்குள்ள ஆசிரியர்கள் எல்லோரும் ஒற்றுமைமையுடன் உழைத்துவருகிறார்கள். பள்ளிக்கூடம் செவ்வையாய் இருப்பதற்கு முக்கியமாக அங்கு உழைத்துவரும் ஆசிரியர்களின் ஒற்றுமையும் நல்ல மனப்பான்மையும் காரணமாகும். இத்தகைய ஆசிரியர்கள்

பெற்றோர்கள் மனதைக் கவருவது நிச்சயம். பெற்றோர்கள் அசட்டையாய் இருக்கிறார்கள் என்று இவர்கள் சொல்லவேமாட்டார்கள். மேலே கூறிய இரண்டு பள்ளிக்கூடங்களைப்போலவே வேறு பல பள்ளிக்கூடங்கள் இருக்கலாம். அவ்வித பள்ளிக்கூடங்களை மற்ற பள்ளிக்கூடங்கள் பார்த்து ஆசிரியர்களுடன் கலந்து அவர்களின் மனப்பான்மையை அறிந்துகொள்வது சரியான முறையாகும். சர்க்காரின் உதவி இவ்விதப் பள்ளிக்கூடங்களுக்கு எதிர்பார்ப்பதற்குமேலாக கிடைப்பது அவசியம்.

ஆனால் உத்ஸாகத்தை மேலே ஊட்டுவதற்கான உதவியையோ குறிப்பையோ நாம் சாதாரணமாகக் காண்பதில்லை. தீண்டாத சாதியைச்சேர்ந்த பிள்ளைகள் சிலரேனும் இல்லை என்பதை ஒரு குறை என்று கருதுவதால் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு தங்களுடைய கடமை என்ன என்பது சரியாக விளங்கவில்லை. சிலவிடங்களில் பெண்குழந்தைகளின் சங்கியை மிகவும் அதிகமாயில்லை என்று குறிப்பு ஏற்படும்பொழுது ஆசிரியர்களுக்கு கவலை உண்டாகிறது. கிராமங்களில் பெண் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவது அபூர்வம். நாளடைவிலேயே சரியான நோக்கம் ஜனங்களுக்கு ஏற்படக்கூடும். ஆகையால் அதிகாரிகள் பள்ளிக்கூடங்களை நடத்துவதில் உள்ள கஷ்டங்களை அறிந்தவர்களாயிருப்பதால் அவர்கள் சரியான முறையில் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களுக்குத்தகுந்த உதவியையும்உற்சாகத்தையும் அளித்தல் நல்லது.

---

**சேலம்**

ஸ்தலஸ்தாபனங்கள் பள்ளிக்கூடங்களை நிர்வாகம் செய்வதில் ஊழல்கள் அதிகமிருப்பதாக பொதுஜனங்கள் சொல்வதுடன் சர்க்கார் அறிக்கைகளிலும் நாம் பார்க்கிறோம். இவ்வருஷம் மேலுக்குமேல் அதிசயமான வழிகளில் ஸ்தலஸ்தாபன அதிகாரிகள் பள்ளிக்கூடங்களை நிர்வாகம் செய்து ஆச்சரியத்தை விளைவிக்கின்றார்கள். பட்ஜட்டை சரிப்படுத்த முடியவில்லை என்று ஜில்லா போர்டுகள் பள்ளிக்கூடங்களை மூடி ஆசிரியர்களையும் நூற்றுக்கணக்காய் நீக்கிவிட்டார்கள். ஸ்தலஸ்தாபனப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் தம் குறைகளை பலதடவை பல வருஷங்களாகச் சொல்லிவரினும் ஏதேனும் ஒரு ஒழுங்கு ஏற்பட்டதாக நமக்குத் தெரியவில்லை. ஆசிரியர்களுடைய மனுஷத் தன்மையையும் சுயமதிப்பையும் பொருட்படுத்தாது அவர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடிய முறைகளையும் கையாள ஆரம்பத்திருப்பதாக நமக்குத் தெரியவருகிறது.

சேலம் ஜில்லா போர்டு தலைவரிடமிருந்து ஆசிரியர்களுக்குக் கிடைத்துள்ள சுற்றறிக்கைகள் விநோதமானவை. ஆரம்பக் கல்வியையும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களையும் அபிவிருத்திசெய்யும் முறையை சற்றேனும் அறிந்திருப்பதாக இச் சுற்றறிக்கைகளிலிருந்து நாம் சொல்ல முடியாது. முதல் சுற்றறிக்கையாவது :—ஆசிரியர்கள் கோடை விடுமுறை தசரா விடுமுறை முதலியவைகளுக்கு மூடும் தேதியிலும் விடுமுறைக்குப் பின்

பாடசாலை திறக்கும் தேதியிலும் கிராம முனுசீப் அத்தாட்சியுடன் புள்ளிவிவர ரிபோர்ட்டு ஒன்று ஜில்லா போர்டுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் அனுப்பவேண்டுமென்பது. இரண்டாவது சுற்றறிக்கையாவது :— பள்ளிக்கூடப் பிள்ளைகளில் நூற்றுக்கு 20 மாணவர்களுக்குமேல் (சில பள்ளிக்கூடங்களில் 100-க்கு 15) ஆஜராகாமல் விடக்கூடாதென்றும் அப்படிக்கு எக்காரணத்தினாலும் மேலே குறிப்பிட்ட சங்கியைக்குக் குறைவுபடின் ஆசிரியர்களிடமிருந்து ஆஜராகாத ஒவ்வொரு பையனுக்கும் ஒரு அணு வீதம் ஆடோமாடிக் அபராதம் வசூலிக்கப்படுமென்பது.

மேலே கூறிய உத்தரவுகள் அமுலுக்கு வந்துவிட்டன. ஆசிரிய சங்கங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டதாகவும் அவ்வபிப்பிராயங்களின் பேரில் உத்தரவை மாற்றவேண்டியது அவசியமில்லை என்றும் போர்டார் தெரிவித்திருக்கிறார்கள். இச்சுற்றறிக்கைகள் ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கும் தெரிந்திருக்கலாமென்று நினைக்கிறோம். நாகரீகமான ஊரில் நாகரீகமான அதிகாரிகள் இருக்குமிடத்தில் அலௌகிகமான உத்திரவுகளை போர்டு அதிகாரிகள் பிரசுரித்தது மிகவும் வருந்தத்தக்கது. கிராமமுனிசீப்பின் அத்தாட்சியுடன் ரிபோர்ட்டை ஆசிரியர்களிடமிருந்து கேட்பது அவர்களின் வேலைக்காரர்களாகச் செய்வது போலாகும். ஆசிரியர்களைக் காட்டிலும் கிராம முனிசீப் உயர்ந்த அந்தஸ்து உள்ளவரா என்று போர்டார் யோசித்திருக்கவேண்டும். தவிர, ரிபோர்டை வைத்துக்கொண்டு கிராமமுனிசீபின் வீட்டு வாசலில் அவர் கையெழுத்துக்காக காத்துக்கொண்டிருப்பது ஆசிரியர்களின் கவுரவத்தை அடியோடு ஒழிப்பதாகும். கிராமத்தில் இந்நிலையில் ஆசிரியர் மதிப்புடன் உலாவுவது கடினமாகும். கிராமமுனிசீப்பின் அத்தாட்சி இல்லாமலே ரிபோர்டை சரியான முறையில் அனுப்பும் பொறுப்பை ஆசிரியர்களிடம் நம்பிவிடுவது நலமானது. அவ்வித நம்பிக்கை இல்லையானால் கிராம முனிசீப்பை தனியாக ஒரு ரிபோர்ட்டு அனுப்பும்படி சொல்வது உசிதமாகும்.

ஆடோமாடிக் அபராதம் என்பது விநோதமானது. அதாவது மனதின் சங்கடத்தை கொஞ்சமேனும் பாராட்டாது ஆசிரியர்களைக் கட்டைபோல் கருதுவதாகும். ஆசிரியர்களின் கடமை என்ன என்பதை அதிகாரிகள் எவரும் அறியவில்லை. முக்கியமாக பள்ளிக்கூடங்களில் பாடத்தை பிள்ளைகளுக்கு சரிவர போதிப்பது அவர்களுடைய கடமை. சர்க்கார்விதிகள் வருவதற்கு முன்பே பழய காலம் முதற்கொண்டு பள்ளிக்கூட தினசரி வேலையை ஆரம்பிக்கும் முன்பு பள்ளிக்கூடம் வராத பிள்ளைகளை போய்க்கவனித்து அழைத்து வருவது வழக்கம். இம்முறை இன்னும் நடந்துகொண்டுவருகிறது. பையன்களை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவந்து நிறுத்துவதும் ஆசிரியர்கடமையானால் பாடங்கள் சொல்லிக்கொடுப்பது அசாத்தியமாய்விடும். அடிக்கடி பிள்ளைகளின் வீடுசென்று பையன்களை கட்டாயப்படுத்தி பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது ஆசிரியர்களின் கடமையில் ஒன்றில்லை என்று நாம் உறுதி

யாய்ச் சொல்லுகிறோம். கட்டாயப் படிப்பு சட்டமுறையில் பிள்ளைகளை வீட்டிலிருந்து பள்ளிக்கூடத்திற்குச் சேர்ப்பதற்குத் தனியாக ஆஜர் உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படவேண்டும். பிள்ளைகள் விடாமல் பள்ளிக்கூடம் வரவேண்டுமென்பதில் அதிகாரிகள் உண்மையாய் ஈடுபட்டிருந்தால் தனியாக ஆஜர் உத்தியோகஸ்தர்களை நியமிக்கவேண்டும். கிராமமுனிசிப்பை ஏன் இந்தவேலையைச் செய்யச்சொல்லக் கூடாது? இன்ஸ்பெக்டர் அதிகாரிகளும் டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர்களும் பிள்ளைகள் ஆஜராகும் முறையை ஏன் கவனிக்கக் கூடாது? பிள்ளைகளின் ஆஜர் முறையைக் கவனித்தால் ஆசிரியர்கள் பாடம் போதிக்கமுடியாது. 100-க்கு 20 பிள்ளைகளுக்கு மேல் குறையாமல் இருக்கவேண்டுமென்று சொல்வதால் கல்வி அபிவிருத்தி யடைய மாட்டாது. 19 பிள்ளைகளிருந்தால் ஆடோ மாடிக் அபராதம் இல்லை. 21 பிள்ளைகளிருந்தால் ஆடோ மாடிக் அபராதம் என்றிருப்பதால் சரியான நோக்கத்தை உற்சாகத்துடனும் நல்ல எண்ணத்துடனும் போற்றாது. சுற்றறிக்கையிலுள்ள ஆடோமாடிக் அபராதத்திலிருந்து தப்பிக்கும் வழியையே நாடுவது சகஜம். யோக்கியமான ஆசிரியர்கள் இந்த சுற்றறிக்கையினால் பாதிக்கப்படலாம். பிள்ளைகள் குறிப்பிட்ட அளவு ஆஜராகவில்லை என்பதற்காக ஆசிரியர்களை அபராதம் போட்டு அவர் சம்பளத்திலிருந்து அதை வசூலிக்கப்படும் என்ற உத்திரவு சட்டத்திற்கும் லௌகிகத்திற்கும் கல்வி நிர்வாக நோக்கத்திற்கும் நேர் எதிரிடையாய் உள்ளது. கல்வி அதிகாரிகள் இந்த உத்திரவை அங்கீகரிக்கிறார்களா? அப்படியாயின் இதிலுள்ள தத்வத்தை இவர்களுக்கும் பிரயோகித்தால் ஒப்புக்கொள்வார்களா என்ற கேள்விகள் கேட்கவேண்டிய அவசியமுண்டாகும்.

சேலம் ஜில்லாவிலுள்ள சில சங்கங்கள் தம் அபிப்பிராயத்தைத்தெரிவித்தும் சரியான வழியில் அபிப்பிராயத்தை பாராட்டாமல் உத்தரவை அமுலுக்கு கொண்டுவருவது நியாயமென்று தோன்றவில்லை. சம்பளத்திலிருந்து அபராதத்தை வசூலிப்பதாக ஆரம்பிக்கும்போது ஆசிரியர்களும் அது சட்டத்திற்கு ஒத்ததா என்று கோர்ட்டில் வழக்குத் தொடரவேண்டியதாகும். அப்படிவருவதானால் அது ஒரு நல்லகாலமேயாகும். அர்த்தமில்லாத சுற்றறிக்கைகளும் உத்திரவுகளும் ஆசிரியர்களின் சுயேச்சையை நீக்கி கல்வியின் முன்னேற்றத்திற்குத் தடங்கலாக இருப்பது கோர்ட்டில் பொதுஜனங்களுக்கும் தலைவர்களுக்கும் தெளிவாக தோன்றக்கூடும். சேலம் ஜில்லாபோர்டார் அவர்களுடைய சுற்றறிக்கைகளையும் உத்தரவுகளையும் திரும்பவும் ஆலோசிக்குமாறு நாம் கேட்டுக்கொள்ளுகிறோம். கல்வி அதிகாரிகளும் மேலேகூறிய உத்திரவுகளின் அலௌகிகத்தை எடுத்துக்காட்டுவது அவசியமாகும். கிராம முனிசீப்பின் கீழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள் என்று எவ்விதத்திலும் நினைக்காமலிருப்பது ஆரம்பக் கல்விக்கு மிகவும் அவசியம். இல்லாவிடில் ஆசிரியர்களும் கிராம முனிசீப்புடன் கிராமக்கட்சியில் சேர்ந்து ஆரம்பக் கல்விக்கு கெடுதல் நேரிடும்.